ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

| தொகுதி | நளஹு ஆடிமீ 1உ | பகுதி. |
| --- | --- | --- |
| 2 | 1916-ம்ஹு ஜுலைமீ 16உ | 1 |

## கடவுள் வணக்கம்

ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று
முறவனந்தம் வினையினு
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
தோவனந்தம் பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
றெய்வமுமனந்த பேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனூன் ஞான
சித்தியா லுணர்ந்து
காரணந்தங்கோடி வருஷித்ததெனவன்பர்
கண்ணும் விண்ணுந்தேக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலைநங்
கடவுளைத்துரிய வடிவைப்
பேரனந்தம்பேசி மறையனந்தஞ்சொலும்
பெரியமௌனத்தின் வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரியபொருளைப் பணிகுவாம்.

காலமூன் றுங்கலந்தொளிராநின்ற
சீலமேநின்றிருவருளாலிந்த்ர
சாலமாயிச்சகமெனவெண்ணிநின்
கோலநாடுதலென்றுகொடியனே

# ஆனந்தபோதினி

## நள௵ ஆடிமீ 1உ

உலகெலாம்படைத்துப் பாதுகாத்தருளும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய ஆண்டவன் அருளால் நமது ஆனந்த போதினியின் முதல்வருடம் திருப்திகரமாகவே சம்பூரணமடைந்த தது. இச்சஞ்சிகையின் விஷயத்தில் நந்தமிழபிமானிகள் வெளியிட்ட நல்ல அபிப்பிராயத்திற்காக நாம் மிக்க நன்றியோடு வந்தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். பொதுநலங்கருதி ஆனந்தபோதினிக்கு அரிய விஷயதானம்புரிந்து இதன் அபிவிர்த்திக்குப் பேருதவியாயிருந்து வரும் அன்பர்களுக்கு நாம் என்றும் நன்றியுடையோம். இதுமட்டுமன்று: சஞ்சிகையைப் போஷித்துவரும் சந்தாநேயர்களில் பெரும்பாலார் இதனிடத்தில் மிக்க அன்புவைத்து இதன் அபிவிர்த்திக்காக சிரத்தை யெடுத்துக்கொண்டு, ஒவ்வொருவரும் தத்தம் நண்பர்களையும் சந்தாதாரராய்ச் சேரும்படி செய்திருக்கிறார்கள். இத்தகைய அன்பர்களுக்கு நாம் மனதார நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இவ்வருடம் சஞ்சிகை இன்னும் விர்த்தியாகும் வண்ணம் இவர்கள் சிரத்தை பிறைமதிபோல் விர்த்தியடையுமென்று பூரணமாய் நம்புகிறோம்.

நேயர்களே! காகிதத்தின் விலை மூன்றத்தனை நான்கத்தனை அதிகமாயிருப்பதோடு தக்க காகிதம் கிடைப்பதும் பிரயாசையாயிருக்கிறது. இதை நோக்கியும் சஞ்சிகையை யின்னும் பெரிதாக்க வேண்டுமென்பதைக் கருதியுமே இரண்டாம் வருடமுதல் சந்தாதாரராய்ச் சேருகிறவர்களுக்கு வருடசந்தா ஒரு ரூபா (வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0) யாக்கி யிருக்கிறோம். ஆயினும் முதல் வருட சஞ்சிகைகள் நம்மிடம் இருக்கிறதனாலும் முதல் வருடத்திலிருந்தே சந்தாதாரராய்ச் சேருகிறவர்களுக்கு என்றும் 12 அணுவிற்குமேல் அதிகப்படுத்துவதில்லை யென்றே தீர்மானித்திருக்கிறோம்.

அன்பார்ந்த நமது சந்தாநேயர்களும் விஷயதானம் புரிந்து வரும், கல்வியாளராகிய நண்பர்களும் இதுகாறும் செய்ததுபோலவே

சிரத்தையாலும் அன்பாலும் உதவிபுரிந்து வருவார்களென்ற பூரண நம்பிக்கை யிருப்பதால், இவ்வருடம் சஞ்சிகையை எவ்வாற்றானும் விர்த்திசெய்ய முயல்வோம். (பத்திராதிபர்)

---

## ஆனந்த போதினி அப்தபூர்த்தி வாழ்த்துப் பாக்கள்.

I

இரண்டாங்கட்டளை, ப்ரஹ்ம ஸ்ரீ R. S. கங்கா ஜடேச சர்மா (Essayist), அவர்களால் இயற்றப் பட்டவை.

காப்பு

ஆனந்த போதினியின் ஆசியினைக் கூறுதற்கு
ஆனந்தக் கடலிணைதாள் போற்றி.

ஆனந்தவாண்டிற் கடுத்தவாண் டாடிமதியதனில்
ஆதித்தனொப்ப வறிவொளிவீசிநம் நாட்டினை
ஆனந்தமாங்கட லாழ்த்திட வேயுபகாரமதாய்
ஆவல்மிருந்தவென் முனிசாமி முதலியவர்செயலால்
ஆ! நந்தமிழ்நாட்டின் முன்னேற்ற நாளென்றறிஞரெலாம்
ஆனந்தமுற்று வியப்பெய்த நன்குதோன்றியுள
"ஆனந்த போதினி" யெனு நாமமுற்ற நற்சஞ்சிகைதா
னண்டாண்டோறும் அபிவ்ருத்தியாய் மிக வாழியவே!

வெண்பா.

அன்பர்கா ளொன்றுசொல்வேன் பாமரரும் பண்டிதரும்
இன்பமுற வோதுமொரு பத்திரிகை—துன்பமிலா
ஆனந்த முற்றிடவே யாவலுட னேதுவது
ஆனந்த போதினி யைத் தான். (1)

தானத்திலன்னஞ் சிறந்ததுவே தானெனினும்
ஞானத்தின் றானத்திற் கீடாமோ—தீனத்தை
நீக்குவது நன்னூலின் நல்லறிவோ நீண்டவுலக
மாக்குவது நல்லுணவோ மற்று. (2)

மற்றுமிதன் நன்மைமிக வேழைகளுஞ் செல்வர்களும்
கற்றுத் தெளிவதொன்றை யேகருதிச்—சற்றுந்
தன்னயமேயின்றித் தாழ்ந்த விலை மிகக்குறைவும்
பன்னயமே கருதியன்றோ பார். (3)

பார்வைக்கு நல்லுருவாய்ப் பக்கங்கள் மிக்கதுவாய்
நேர்வைக்கும் பத்திரிகை யில்லாதாய்—சீர் மிக்க
சங்கதிகள் கொண்டதுவாய் சத்யநெறி கண்டதுவாய்
இங்கதிகங் கண்டுதெளி வாய். (4)

வாயதனு லீஸ்வரனை வாழ்த்தவுநற் செய்கைகளைக்
காயத்தாற் செய்து களித்திடவும்—தூய
நல்லறிவைப் பெற்றிடவு நல்வாழ்வை யுற்றிடவும்
புல்லறிவைப் போக்க வழியாது. (5)

யாதெனிலோ வைதிக லௌகிக ஞானங்கள்
ஈதெனவே யோர்வது தான்வேண்டும்—ஆதலினால்
சிறுவருடன் பெண்டிர்களும் ஆடவரு மோதிநலம்
பெறுவதுவா யுள்ளதனைக் கேள். (6)

கேட்டால் நலமடைந்து கேடகன்று மேன்மைபெற
மாட்டாத மானிடரு முண்டோகாண்—கேட்டவர்கள்
பிறந்துழல வேண்டாங்காண் பிறவினைகள் மாறிவிடும்
சிறந்தநிலை சித்திக்கு மே. (7)

மேலா நிலைமைபெற வேண்டுபவர் தேடுகிற
நூலாமிவ் "வானந்த போதினி" யை—நோலாத்
தாழ்மக்கள் தாமடைய வாய்த்திடுமோ தத்துவத்தி
லாழ்மக்க ளல்லாத வர்க்கு. (8)

குறைவில்லாத் தன்மைபெற குணங்குடிகொண் டேற்றமுற
முறைவழுவாத் தமிழ்மாதந் தோறும்—மறையெனவே
திருச்சென்னை னின்றுவரும் தேன்சொறியும் போதினியின்
பெருமையினை நன்குணர்ந்தேன் யான். (9)

யானுரைத்த சொற்களிலே யாதொன்றும் பொய்மையிலை
வானுறையுந் தேவறியச் சொல்வேன்—கானுறையும்
ஆனந்த யோகியரும் முனிவர்களுங் காமுறுமிவ்
ஆனந்தபோதினிக் கீ டேது ! (10)

வேறு.

ஆனந்தபோதினி பத்திரிகை வாழி ! சந்தாவுதவும்
ஆனந்த நண்பரும் வாழி ! யப்பத்திரிகைக்கு மிக
ஆனந்தமான வியாஸம் வரைபவர்வாழி ! பல
ஆனந்த காரணப் பரம் பொருடாண்மிக வாழியவே !

சுபம்.

---

II

இரங்கூன் வித்வாபிமான சங்கத்துக் காரிய நிர்வாகா

செந்தமிழ்பாறு

திருமயிலை பா. முனிஸ்வாமிப்பிள்ளை யவாகள் கூறியன.

கங்கை நிலவுலகங் காக்குந் திருவருளால்
திங்கட் கதிரிற் சிறந்தோங்க—நங்கையுனை
யீனந்த போதினித்த வெண்மடங்கா னந்தமரு
ளானந்த போதினியன் பாய் !

ஆண்டிரண்டுக் காளா யமுதூட்டிக் காத்தளித்த
ஆண்டகையா ராதரவா ரன்பருடன்—வேண்டுஞ்
சுகமனைத்தும் பெற்றிந்தத் தொல்லுலகில் வாழ்க
யுகமனைததுங் கீர்த்தியுற வே

பத்திரத்துக் கான பணியணியுஞ் சேர்க்கவெணி
நித்திரையு நீத்து நினைந்துருகுஞ்—சித்தமுள
ஆனந்த போதினியி னதிபன் முனிசாமி
யானந்த மேயானந் தம்.

---

## III

புனலூர்-ம-m-m-ஸ்ரீ, E. S சிவராமலிங்கம்பிள்ளையவர்கள்
இயற்றியவை.

### விநாயகப்பெருமாள் துதி.

(அறுசீரடிப்பாக்கள்)

மதிக்கொழுந்து சடாமகுட வள்ளறனைப் பிரியாத வஞ்சி மின்னாள்
சதிக்கொழுந்து உதவியகுஞ் சரமுகத்துப் பெருமானை சரணஞ் செய்வாம்
பதிக்கொழுந்தற் சகவாசம் பொடித்தெவர்க்கு மெய்மையியல் பகர்ந் துலாவு
நிதிக்கொழுந்தா மானந்த போதினிநீ டூழிநின்று நிலைக்க மாதோ. (1)

### சரஸ்வதி துதி.

வாரணியை யுடையவர்கண் மனநிலைமை தனையுணர்ந்து வழுத்தும் ஞானச்
சீரணியை யுடையவா னந்தபோ தினிநாளும் சிறப்பெய் தோங்கக்
காரணியை மறைகளுக்குக் கலையுணர்ந்த வல்லோரைக் காக்கும் வேதப்
பூரணியை வெண்கமலப் பதியரசி தனைநிதமும் பணிகு வோமே. (2)

### சுப்பிரமணியர் துதி.

கருவாயிற் கடப்பதற்கோ ருரியவழி தனைக்கழன்று கலக்கந் தீர்க்குந்
திருவாய்மை யானந்த போதினிமென் மேல்விளங்கிச் செழிப்பெய் தோங்க
ஒருவாயி லெழுகடலு முள்ளடக்குங் குறுமுனிக்கு முயிர்த்தோ னிற்குங்
குருவாக வந்தவனைக் குகப்பொருளைச் சிந்தையினிற் கோரு வாமே. (3)

### பரமசிவ வணக்கம்.

சீவன்வந்த வாறுமுடற் செனித்தவா றவைநிவர்த்தி தெளியக் கூறுங்
கோவளநேர் சென்னையா னந்தபோ தினிதினமுங் குறையா தோங்கக்
காவன்மறை மாலயனுங் காணரிய பராபரத்தைக் கயிலை வாழ்வைத்
தேவரிறை தெவிட்டாத ஞானவா ரிதியையென்றுஞ் சிந்திப் பாமே. (4)

### பராபரை துதி.

பூதலத்தின் மாந்தர்பிணி பொடிச்சுவகை தனைவிளக்கிப் புகலுஞ் சென்னை
மாதலத்தி னனந்த போதினிமென் மேலுலகிற் றழைத்து வாழ்கச்
சோதரன் மாற்பிணிநீங்கத் துளவமளித் துலகமெலாந் துலக்க வீன்ற
மேதமிற்கன் னிகையெனவே யினம்விளம்பு முமையாளை யேற்று வாமே.

### திருமால் துதி.

திருவாழி நூல்கடைந்து கலைஞான விளக்கமெலாஞ் செறிந்து லாவுந்
திருவாழி யானந்த போதினியுஞ் சோதியெனச் செயல்பெற் றோங்க
திருவாழி கடைந்தமுதந் தேவருண்ண வைத்தவன்றன் றேவிக் கன்று
திருவாழி தனைவிடுத்தோன் திருமாது பதிபாதஞ் சேர்ந்துய் வாமே. (6)

## சூரியன் துதி.

மானமொடு புகழ்வலிமை மக்கண்மனை செல்வசுக மனத்தின் பாங்கும்
தானமொடு பக்திதவம் சாதுசங்கத் தினருறவு சகல வேத
ஞானமொடு பொறைதெளித லிம்மைமறு மைவாழ்வு நண்ணி மேவும்
பானலஞ்சே ரானந்த போதினியைக் கார்கதிரைப் பணிகு வோமே. (7)

## போதினியின் பெருமை.

இதிகாசபு ராணகதை யெழில்ஜெயத்தோர் சரித்திரங்க ளிணையி லாத
பதிவாச விவகாரம் பாவையர்க ணல்லொழுக்கம் பகரு மாதி
விதிவாசப் படைப்பியல்பு விவையனைத்துஞ் சூதனைப்போல் விளம்பி லோகர்
கதிவாசம் பெறுவதற்கா னந்தபோ தினியல்லாற் கழறற் குண்டோ (8)

## போதினியினதிபர் வாழ்த்து.

இத்தகைய நலஞ்செறிந்து மானிடர்கள் புனிதமுற வியலும் வண்ணம்
பத்திரிகை தனையீன்ற முனிசாமி வள்ளலிந்தப் பாரின் மீது
எத்தகைய கீர்த்திகளு மிணையில்லாப் பெருவாழ்வு மெய்தி மேற்கண்
சித்தமுளோர் தெய்வமெனத் தினமதிபோ னீடூழி செழித்து வாழி. (9)

## போதினியைப் போஷிக்கும் நேயர்கள் வாழ்த்து.

எக்கலையு மெய்திவரு மானந்த போதினியை யினிதன் பாக
பக்குவமு டன்வளர்த்துப் போஷிப்போர் சந்தாவாய்ப் பயின்றோர் யாரும்
திக்கெலாம் புகழெய்திச் செல்வர்களாய் வாழ்ந்திருந்து ஜெயங்கொண் டோங்க
மிக்கமுதற் பொருள்பதத்தை கருத்துள்வைத்து நாடோறும் வேண்டு வாமே.

---

## IV

### காருடை - நல்லயப்பபிள்ளையவர்களா ளியற்றியது.

வெண்பா

வானந்தரு மழைபோல் வண்மையொடு நல்லவெலாம்
தானந்தா தென்றுமிவண் தந்திடுவாய்—ஆனந்த
போதினியே ! நேயருடன் பொற்புடனே வாழ்கவென
ஆதியனைத்தொழுதே னால்.

---

## V

### வரகவி-திரு. அ. சுப்ரமண்யபாரதியா ரியற்றியது.

வெண்பா

நல்லாரி னுசிபெற்று ஞாலத்தோ ராண்டாக
எல்லா நலனுமினி தீந்துயர்நூல்—வல்லாரும்
போற்றவள ரானந்த போதினியென் றென்றுமிவண்
ஏற்றமொடு வாழ்க விசைந்து.

---

# பக்தி

பக்தி யென்பது வணக்கத்தோடு கூடிய அன்பு. அன்பு என்பது தெய்வீகம் பொருந்திய ஓர் அரியகுணமாகும். அன்பிற்கு யாரும் கட்டுப்படுவார்கள். அன்பினால் யாரையும் நமக்கு நண்பராக்கிக் கொள்ளலாம். கடவுளே அந்த அன்பிற்கு கட்டுப்படுகிறார் என்றால் மற்றையவரைப்பற்றி கூறுவானேன். நாம் கடவுளிடத்தும், பெற்றோரிடத்தும், குருவினிடத்தும், ஆன்றோரிடத்தும் வைக்கும் அன்பிற்கே பக்தி யென்று பெயர். "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளி யிருக்கிறார். மேற் கூறப்பட்ட நால்வரும் நமது பக்திக்குரியவர்கள். நாம் அவர்களிடம் பக்தி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கடவுளிடத்தில் பக்தியின்றேல் வேறு எவ்விதத்தாலும் மோட்சம் கிட்டாது. நாம் கடவுளிடத்தில் வைக்கும் பக்தி பரிசுத்தமானதாயிருக்க வேண்டும். அதாவது ஒரு நாட்டத்தைக் கொண்டு பக்தி பாராட்டலாகாது. அது நிலைபான பக்தியாகவுமிராது. ஏனெனில் நமது நாட்டம் நிறைவேறியபின் அப்பக்தி குறைந்துவிடும். கடவுள் அன்புருவமானவர். அந்த அன்பே ஆனந்தமயமானது. நாம் கடவுளிடத்தில் வைக்கும் அன்பு பூரணமானபோது, அதே கடவுளின் சொரூபமாதலால் நமது ஆன்மாவும், அதாவது நாமும் அன்புருவமாய் விடுவோம்.

நமது தாய் தந்தை குரு முதலியவர்கள் உருவமாய் நமது கண்களுக்குப் புலப்படுகிறார்களாதலால் அவர்களிடம் அன்பு பாராட்ட நமக்குக் கூடுமானதா யிருக்கிறது. கடவுள் இன்னவுருவம் என்று பாவிக்க முடியவில்லையே, நாம் எப்படி யவரிடம் அன்பு வைப்பது ? என்று ஒரு காலத்தில் ஒரு நண்பர் நம்மை வினவினர். இவ்வித சந்தேகங் கொண்டு அனேகர் பக்தியில்லாதவர்களாகவே யிருக்கிறார்கள். ஆனால் நமது வேதத்தில் அவரவர் அறிவிற் கெட்டியவாறாய் முயற்சி செய்து முடிவில் யாவரும், அதாவது பல அளவான அறிவின் விளக்கமுடையோரும், முத்தி யடையும் வண்ணம் விதிகளும் மார்க்கங்களும் கூறப்பட்டிருக்கின்றன. அறிவின் விளக்கம் அவரவர் புண்ணியத்தி னளவாய்ப் பல பேதப்பட்டிருக்கிறது. ஒருவன் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற ஒரு உண்மையை நம்பியே அக்கடவுளைத் துதிக்கவும் மனதை முழுதும் அவர் நாட்டத்திலேயே வைக்கவும் சக்தியுடையவனா யிருக்கிறான். ஒருவன் நாமமும் ரூபமுமுடைய

ஒரு பொருளைக் கண்டால்தான் அதனிடத்தில் மனதை நிறுத்தக் கூடியவனா யிருக்கிறான். மற்றொருவன் அந்த உருவத்திலுங் கூட மனதை நிறுத்தச் சக்தியின்றி யிடை யிடையே அலைந்து ஓடும் மனதை யடக்கமுடியாமல் அதன் போக்கேபோல் விட்டு விடுகிறான். இன்னொருவன் நாமென்பதும் மனமென்பதும் வெவ்வேறு பொருள்கள், நாம் அம்மனதை வேறாயுணர்ந்து அடக்கக்கூடும் என்ற விஷயத்தை யுணரவே சக்தியற்றவனா யிருக்கிறான்.

குழவிப் பருவத்தில் தாயை யிழந்த ஒருவன் அறிவு வந்தபின் நம்மைப் பெற்ற ஒரு தாய் இருந்தேயிருப்பாள் என்பதை யறிந்து கொள்ளுகிறான். ஒருவன் உனக்குத் தாய் இருந்ததேயில்லையென்று அவனிடம் கூறின், அவ்வாறு கூறியவனை மூடன் என்று அவன் மதிப்பானேயன்றி தான் உண்மையிற் சந்தேகங் கொள்ளான். அந்தத் தாயை யவன் காணவில்லை யேனும், ஐயோ நாம் மகாபாவி, நம்மைப் பெற்ற தாயைக் கண்ணால் காணப் புண்ணியம் பெறாமற் போனோமே யென்று வருந்துகிறான். அதற்குக் காரணம் தான் காணாத அம்மாதாவிடத்தில் அவன் மனதிலுண்டாயிருக்கும் அன்பேயாகும். அந்தத் தாயை யிப்போது வேண்டுமாயினும் காணவொரு மார்க்க மிருக்கிறதென்று அவனுக்குத்தெரிந்தால் அவன் எல்லாத்தொழிலையும் விட்டுவிட்டு தாயைக்காணவேண்டிய முயற்சிகளையே செய்யத் தொடங்குவானென்பது உண்மை.

அதைப்போன்றே அறிவாளி கடவுளைத் தான் கண்ணால் காணாவிட்டாலும் இந்தச்சொல்லொணா அதிசயம் வாய்ந்த அண்டபிண்ட சராசரங்களையும் படைத்தளித்தழிக்கும் கடவுள் ஒருவர் உண்டென்றும்; அவரே நமக்கு நிலையான தாயும் தந்தையும் சுற்றமுமாவார் என்றும் உணர்ந்து அவர்மேல் அன்புவைத்து அவரையடைய முயற்சி செய்கிறான். நாமரூபமுடைய மற்ற எல்லாப் பொருள்களும் நிலையற்ற அநித்தியப் பொருள்களாதலால் வேறொன்றையும் வேண்டி அவன் கடவுளிடம் பக்திவையான். ஏனெனில் அநித்தியமாகிய ஒன்றையும் அவன் அடையவிரும்பமாட்டான். அவன் பக்தி இடைவிடாத பரிசுத்தமான பக்தி.

அத்தகைய அறிவு விளக்கமில்லாதவர்களுக்கே உருவத்தியானம் கூறப்பட்டிருக்கிறது. கடவுளுக்கு உண்மையில் உருவமில்லை. அவர் ரூபியென்றும், அரூபியென்றும், ரூபாரூபமுடையவரென்றும் கூறமுடியாது. இத்தன்மையரென்று யாராலும் அவர் பெருமையை

யளவிட்டுக்கூற முடியாது. எல்லா உருவமும் எல்லா ஆன்மாக்களும் யாவும் அவரே. ஆயினும் கடவுளால் சிருட்டிக்கப்பட்ட எல்லாவுருவங்களிலும் மானிடவுருவமே சிறந்ததாதலால் கடவுளை யவ்வுருவமாய்ப் பாவித்து அதன் மூலமாய் மனதை யொருவிடத்தில் நிறுத்தவும் கடவுளிடம் பக்தியுண்டாகவும் செய்துகொள்ளலாம் என்று விதியேற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆறுகளனைத்தும் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி, வெவ்வேறு திக்குகளின் வழியேசென்றாலும் முடிவில் யாவும் கடலையேசேரும். அதுபோல் எந்த உருவத்தைக் கடவுளென்று நம்பித்துதித்தாலும் அத்துதி கடவுளையேசேரும். நாம் வைக்கும் அன்பு பூரணமாய் முதிர்ந்து பழுத்த போது பக்திசெய்யப்படும் பொருளாகிய முன்னிலைப்பொருளும், பக்திசெய்பவனாகிய தானும், இரண்டுமின்றி அன்பேயுருவமாகிய ஏகவுருவமாய்விடும்.

இவ்வாறு கடவுளை யுருவமாய்ப் பாவித்து பக்திசெய்து மோக்ஷமடைந்தோர் அனேகர். இவர்கள் செய்யும் பக்திகடவுளையேசேருவதால் அவர் இவர்கள்மேல் அருள்வைத்து, இவர்கள் தன் அருமையான உண்மை நிலையை யுணரும்படிக்கும் தன்னையடையும் படிக்கும் அநுக்கிரகம்செய்கிறார். மனிதனாய்ப்பிறந்த ஒரு குருவே ஒருமூடனுக்கு அறிவுவிளங்கி அவன் மெய்ஞ்ஞானியாகும்படிசெய்யச் சக்தியுடையவரென்றால், சர்வவல்லமையுள்ள கருணாநிதியால் எதுதான் நினைத்தவண்ணமாகாது.

ஆகையால் தத்தமது அறிவிற்கெட்டியபடி எவ்விதமாகவேனும் கடவுளிடத்து பரிசுத்தமான பக்திவைக்க முயல்வது மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமையாகும். அதிகமாய் விரித்துக்கூற சஞ்சிகையிடந்தராதாதலால் இம்மட்டோடு இப்போது முடிக்கிறோம்.

---

## மலர்.

மலரே! மலரே! என்மனம் மலர
மலரும் மலரே! மலர்நின் மாட்சி
என்னெனக் கூறுவல்! இறைவன் திருமுடி
தன்னிலும் விளங்குவை; தாரணி யாளும்
வேந்தர் முடியிலும் மேவிவீற் றிருப்பை;
ஏந்திழை யார்தம் எழிலெழில் செய்வை
மலரே! உன்னை மலரெனக் கூறுவ

தென்னெனில் எத்துணை இடர்க்கடல் ஆழ்ந்து
உன்னுதற் கரிய துயருற் றிருப்பினும்
மாந்தர துள்ளம் மற்றுநின் வரவால்
மலர்கிற தன்றோ ? ஆதலின் மலர்! உனை
'மலர்' எனப் பெரியர் வழங்கினர் வாழி !

பறவைகளும் விலங்குகளும் விரும்புவதான கானரசத்தில் சிலருக்கு விருப்பம் இல்லாதிருப்பினும் மலரை வேண்டாமென்று வெறுப்பார் யாரும் இல்லை. ஒவ்வொரு நாட்டாருக்கும் ஒவ்வொரு மலரின் மீது மிகுந்த விருப்பம். கண்டவுடன் ஒருவனுக்குள்ள சோகத்தைத் தீர்ப்பதால் ஒரு வகையான மலருக்கு அசோகு என்ற காரணப் பெயர் வழங்கி வருகின்றது. பீமசேனன் திரௌபதைக்காக ஸௌகந்தி மலர்கொண்டு வரும்படி யாத்திரை சென்ற கதை பாரதத்திலே கூறப்பட்டிருக்கிறது. ஸத்யபாமைக்கு பாரிஜாத புஷ்பம் கொண்டு வரும்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் தேவலோகத்திற்குச் சென்ற விஷயத்தைப் பாகவதத்தில் கேட்டிருக்கிறோம்.

அறிவுத் தெய்வமான ஸரஸ்வதி வெண்டாமரையில் இருப்பவள். செல்வத்திற்குரிய தெய்வமான ஸ்ரீதேவி செந்தாமரையில் இருப்பவள். காமதேவனான மன்மதன் மலர்க்கணையோன், வேத நாயகனான பிரமனும் கமலஸம்பவன். சிவன் 'கொன்றை வேந்த செல்வன்' என்றும் 'ஆத்திச்சூடி' என்றும் கூறப்படுகின்றான். நவக்கிரகங்களில், சூரியனுக்குச் செந்தாமரை மீது விருப்பம், சந்திரனுக்கு வெள்ளல்லி, செவ்வாய்க்கு சண்பகம், புதனுக்கு வெண்காந்தள், குருவுக்கு முல்லை, சுக்ரனுக்கு வெண்டாமரை, சனிக்குக் கருங்குவளை, ராகுவுக்கு மந்தாரை, கேதுவுக்குச் செவ்வல்லி. இவ்வாறு தேவர்களும் மலரைப் பெரிதும் விரும்புகின்றனர்.

முற்காலத்திலும் இக்காலத்திலும் அரசர்கள் மாலைப்பொழுதில் தங்கள் அரண்மனைகளைச் சேர்ந்த பூஞ்சோலைக்குத் தம் மனைவி மக்களுடன் சென்று அங்குள்ள தருக்களின் மாட்சியையும் அவற்றில் மலர்ந்திருக்கும் பல நிறம் வாய்ந்த அழகிய மலர்களின் காட்சியையும் கண்டு இன்புறுவது வழக்கமாயிருந்து வருகிறது. செல்வராயினும் வறிஞராயினும் தத்தமக்கு ஏற்றவண்ணம் தங்கள் வீடுகளுக்கு அருகே சில புஷ்பச் செடிகளை வைத்து வளர்த்தல் நன்று. அன்றைக் கூலியைக் கொண்டே பிழைப்பவனாயிருப்பினும், அவன் தனக்கு விருப்பமுள்ள புஷ்பச் செடியைத் தனது வீட்டு முற்றத்

திலே ஒரு சிறு தொட்டியில் வைத்து வளர்ப்பது கஷ்டமன்று.

செடிகள் வைத்து, இலைவாடி வதங்கிக் கெட்டுப்போகாதபடி அவற்றைத்தகுந்தவாறு பாதுகாத்து நன்றாய்ப்புஷ்பிக்கும்படி செய்ய வேண்டும். நாம் எவ்வளவு அவற்றைக் கருத்தாய்ப் பாதுகாத்து வருவோமோ அவ்வளவு அவை நன்றாய்ப் புஷ்பித்து மனமகிழச் செய்யும்.

செடிகளுக்கு நம்மைப்போல் பேச வாயில்லாதிருந்தாலும் தாவரசாஸ்திரத்தின் உள்ளுறைப் பொருள்களை நன்கு கற்றுணர்ந்த அறிவாளிகளுக்கு அவை அனைத்தும் புலப்படுமாதலால், அவை அவர்களோடு பேசுவதுபோலவே யிருக்கும்.

> " தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
> தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
> அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
> மன்னர்க் கிருக்க நிழலா கும்மே. "

என்றபடி ஒரு சிறிய வித்தில் முளை, இலை, பூ, காய், பழம் முதலிய வற்றை யுடைய ஒரு பிரம்மாண்டமான விருட்சமே யடங்கி இருப்பது என்ன ஆச்சரியம் !

நமது கண்ணுக்குத் தெரியாத வெகுதூரத்திலுள்ள இடத்தில் புஷ்பித்தாலும் ஒரு புஷ்பத்தின் கந்தம் ஆகாயமார்க்கமாய்க் காற்றின் வழியாய் நமக்குப் புலப்படுகின்றது. இதனால் ஒவ்வொரு பூவிலும் கண்ணுக்குப் புலப்படாத மகாநுட்பமான அணுக்கள் இருக்கின்றனவென்றும், அவற்றுள்ளே மணம் இருக்கிறதென்றும் நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். மலர்களால், ஆதியும் அந்தமும் இலாத அரும்பெருங் கடவுளின் பேராற்றலை அறிந்துகொள்வது எளிதாகும்.

மலர்போலவே, மனிதர்களும் மங்களம் பொருந்தியவர்களா யிருக்கவேண்டும். நல்லவர்களை மலருக்கு நிகராகக் கூறலாம். மலரானது தனது அழகாலும் மணத்தாலும் மனிதர்களுக்கு இன்பமும், பயனும் அளிப்பதுபோல மனிதர்களான நாமும் நமது குணத்தாலும் செயலாலும் பிறருக்கு இன்பமும் பயனும் அளித்தல் வேண்டும்.

மாதந்தோறும் மலரும் 'ஆநந்தபோதினி' என்னும் இவ்வழகிய மலர் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஆநந்தத்தை அளித்து அவர்

கள் உள்ளங்களையெல்லாம் மகிழ்ச்சியால் மலரச்செய்து வருகின்றது. மற்றமலர்கள் விரைவில் வாடிப்போவதுபோல இதுவாடிப் போவதில்லை; ஆனால் என்றும் புலராது மணந்தருகின்றது. அதனால் நம் 'ஆனந்தபோதினி' என்றும் வாழ்கவென நாம் வாழ்த்துவோமாக!

---

## சசிவர்ணபோதம்

(முதல் தொகுதி 460-வது பக்கத்தொடர்ச்சி)

சசிவர்ணா!

இதுகாறுங் கூறிவந்த இதோபதேசங்களைக் கேட்ட உன்
சிந்தையிலையமெல்லாந் தீர்ந்ததோதெளிவினுள்ளே
அந்தரங்கலந்ததுண்டோ அனுபவமுரைசெய்வாயே.

(கைவல்லியம்)

என்றருளினார் குரு.

இவை யனைத்துங் கேட்ட சசிவர்ணன் புளகாங்கிதங்கொண்டு ஹே! பரமகருணாநிதி! தேவரீர் திருவாய் மலர்ந்தருளியவாறு இவ்வுலகில் நங்கண்களால் காணப்பெறும் எவ்விதத் தோற்றப்பொருள்களும் இறைவனருட்படி அப்போதைக்கப்போது ஆவனவும் அழிவனவுமாயுள்ள வாதலால், அவைகளால் எய்தும் பலன்கள் யாவும் நிலைப்பன வல்லவென்றும், இவைகட்குக் காரண கர்த்தவ்யமாய் நிற்கும் ஓர் மூலப்பொருள்தான் நித்தியமாயுள்ளதென்றும் செவ்வனே விளங்குகின்றது. மேலும் இவைகள் விவேகானுபவத்தையொத்திருப்பதோடு நித்தியா நித்திய வஸ்து விவேகத்தை நன்கு விளக்கிக் காட்டுகின்றன.

ஹே! இன்முகமலர்ந்த இறைவ!

நார்குழிபறித்துமெள்ள நாட்டியநெடியகம்பம்
உரமுறக்குத்திக்குத்தி யுறப்பிக்குமுபாயம்போலே
பரமசிற்சொரூபந்தன்னிற் பற்றியமனோவிருத்தி
திரநிலைபெறச்சந்தேகந் தெளிதலைமொழிகின்றேனே.

(கைவல்லியம்)

என தீர்க்கோபதேசஞ் செய்தவாற்றால் அவ்வுபதேசமானது இனி எனதகத்தே ஐயம் உண்டாகாவண்ணம் சந்தேக மோகங்களை அகற்றி விட்டது.

ஹே சுவாமி !

"மந்திர மூர்த்தி தன்னால் மாற்றிய பேய்போனாலும் எந்திர மெழுதிக் கட்டி இனி வரா வகை செய்வார்போல்," (மந்திரவாதி பேயை யோட்டிவிட்டாலும் மறுபடியது வராவண்ணம் இரட்சா பந்தனம் எழுதிக் கட்டுவதுபோல்) மூர்த்தி யுன் னுபதேசத்தால் எனக்குள்ள மோகமானது பறந்து போனாலும் இனி மீண்டும் வந்தடையா வண்ணம் ஓர் உபாயத்தை உபதேசித்தருள வேண்டும் என்று அருந்தவ முனிவர் அடியிறைஞ்சிய அந்தணனை யாசிரியோ டமர்த்தி யருள்வதானார் :—

அப்பா ! சாதாரணமன்று. நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்வது போன்று நிட்களங்கமடைந்த நெஞ்சத்தேதான் இந்நித்திய வஸ்து விவேகம் நிலைபெறும். இவ்விவேகத்தின் செயல் மிக்க வேடிக்கையே. இவ் விவேகமானது தன்னிடங் கொண்டுள்ள மேலோருடைய மனவோட்டத்தைத் தடுத்துத் தன்பால் நிறுத்திப் பிடித்துக்கொண்டு, விடயங்களில் தானே முன்சென்று நின்று மனதை நோக்கி,

ஹே நிலையிலி ! இங்கே நில். நான் சொல்வதைக் கேள். கன்மத்தாலாய அநித்தியமான சத் சந்தன கந்த வனிதாலங்கார விஷய போகங்களை இகத்தே யனுபவிக்க நீ வீணாய் அலைந்து திரிகின்றனை. இறுதியாய் அப்போகங்களில் யாது பயனடைந்தாய். நீயோ உன்மத்தம் பிடித்தவன், ஒரு பொருளின் உண்மையைக் கொள்ளாமல் ஒன்றைக் கண்டு அதை மற்றொன்றாகப் பாவித்து மயங்குபவன், காமதுரந்தரன்,

அடா, அறிவிலி !

காமனுக்கு வன்மைமாத ரன்றிவேறு கண்டதுண்
டாமெனச்சொல் வாரியாவ ரனையர்பெண்மை யறிவிலா
பாமரர்க் கலாதுணர்ந்து பார்க்குமெம்ம னோர்க்குமே
மாமயக்க மெந்தவாறு மதிபுகத்தும் வண்ணமே.

எழுகுறும்பி பெருகுகாதை வள்ளையென்ப ரிகழ்கரும்
புழுவடர்ந்த குழலிருண்ட புயலதென்பர் பூளைநீ
ரொழுகுகண்கள் குவளையென்பர் தாளமென்ப ருமிரொடும்
பழுதுறும்பல் லென்பையின்ன பகர்வதென்ன பாவமே.

எச்சிறங்கு வாய்விளிம்பு பவளமென்ப ரெழுமிரண்
டச்சிலந்தி கொங்கையானை யாகுமென்ப ரதுபெருங்

கச்சிலங் கிருந்துமாவி கவருகின்ற தென்பரால்
பிச்சிலங் கவர்க்குநேர் பிரரந்த ரியாவர்பேசிலே.
நாசியூறல் கோழையெச்சி னூறுமா முகத்தையே
மாசிலாத பூர்ணசந்த்ர வட்டமென்ப ரொட்டுவைத்
தேசுறுந ரம்பினைக்கொ டென்புகட் டமைத்ததோள்
வீசவீச நெஞ்சழிந்து வேணுவென்பர் காணுமே.
குடர்நரம்பு தசைவழும்பு குருதியென்பு சுக்கில
முடைகிடந்த பொந்தின்மேலோர் தோல்விரித்து மூடியே
யடர்வுறும்பல் துளைகடோறு மறுவறுப் பறுமலம்
படர்தல்கண்டு மதனையேகொன் மகளிரென்று பகர்வதே.

(மெய்ஞ்ஞானவிளக்கம்)

என்றெண்ணுமல், பெண்ணுசையே பெரிதென்றெண்ணிப் பேரவா வென்னும் நரகக் கிடங்கிற் படுத்துப் புரளுகிறுயே, பேயே!

மாந்தர்கள் தம் உடம்பில் ஊத்தை நாற்றங் கமழாவண்ணம் நாசி மணக்க நறுஞ்சந்தன கந்தம்பூசி புஷ்பம் முடிப்பதல்லாது பசி போக்கும் பொருட்டா வென்பதை உணர்ந்துபார். மேலும் அழகு அழகென்று அழுகிறுயே, என்ன அழகு, எது அழகு,

நோக்கதனிற் பீளையிரு செவிகளிலுங் குறும்பி
யண நுகர்வா யெச்சில்
மூக்கதனிற் சளிதலையிற் பேன் வியர்வை
மலசலங்கள் மூறு நாற்றம்
போக்கவொரு நாட்கழுவா விடிலழுக்கு மிகத்
திரண்டு புழுத்து நாறும்
ஆக்கமிலாத் தேகமிதி லழகென்ன செருக்க
லறி யாமை நெஞ்சே.

(வேதநாயகம் நீதிநூல்)

என்று அம்மனத்தைப் பலவாறு வைது இவ்விதத்தே நுகரும் பொருள்களின் இழிவுகளை யாவும் இசைத்து இடித்துக்காட்டி அவை களை அகற்றும் மார்க்கத்தையும் கன்ம ஜன்னியத்திஞல் இனி பர லோகத்தே துய்க்கும் ரம்பா சம்போகங்களையும், அவற்றின் நிலையின் மையையும் எடுத்துக் காட்டி, இவ்விகபர போகங்களை வாந்திசெய்த அன்னம், மலம், மூத்திராதிகள் போல் பாவித்து ஆசையறச் செய் யும் மார்க்கத்தைப் போதித்து இச்சகத்திற்குக் காரணகர்த்தாவாகிய இறைபிடத்தே பிரீதி வாய்க்கச் செய்யும் சக்தியுள்ளது இந்நித்திய விவேகம். இதனையே 'இக மூத்திரார்த்த பலபோக விராகம்' என் பர் மேலோர்.

கேட்டனையோ சசிவர்ணா! இவ்விவேகத்தின் செயல்களை இகபர போகங்களை துச்சமாய் வாந்தி மல மூத்திரங்களைப் போல் பாவித்து, அவைகளை யறவே நீக்கச் செய்யும் விவேக சக்தியின் தன்மையை விளம்பற்பாலதா. இதனாலன்றோ ஜனகர், பிருங்கி, தத்தாத்திரேயர், அனுமார், சுகர், நாரதர், தூருவாசர், ஜடபரதர், போதாயனர் முதலிய மகான்களெல்லாம் உலகப் பற்றுகளை யறவே யொழித்து எஞ்ஞான்றும் இன்பத்தோடேகாந்தப் பேறெய்தினார்கள்.

உண்மையிலேயே உள்விழைவற்று அவ்வொருவனையே உன்னியுன்னி உவகையெய்துவதே உயர்ந்தோர் ஒழுக்கமாம். இதனாலே உட்பகைகள் ஆறும் ஒருங்கே யாய்ந்து போமென்றுணர்.

இவ்வுட்பகைகள் ஒழிந்து போகவே ஆறுவித உள்தெளிவுகள் உதிக்கின்றன. முதலாவது, விவேகத்துளங்கிய மனத்தைத் தன்னிடத்தே நிறுத்தி சிறியோர் கூறும் தேவோப தேசத்தின் மேல் சிரவணம் வைப்பது. இதற்குச் சமம் என்று பெயர்.

இரண்டாவது ஞான கருமேந்திரியங்களின் வழியாய் அடிக்கடி மனதைச் செல்ல விடாமலும் எந்தெந்த இந்திரியவாயிலாய் அவசியம் மனத்தைச் செலுத்தவேண்டுமோ அதன் வாயிலாய்ச் செலுத்தி அப்போது பிற இந்திரியவாயிலை அடைத்து வைப்பது. மனம் தன் (விவேகத்தின்) இஷ்டப்படி வேணுமானால் வேண்டிய அளவு செல்ல விடுவது. இதற்கு தமம் என்று பெயர்.

மூன்றாவது விகிதமான கர்மங்களை புத்தி பூர்வகமாய் விட்டுவிடுகிறதென்றும் இதை சன்னியாசம் என்றும் சொல்லுவார்கள். அப்படியன்று; விகிதமான கர்மங்களில் கர்த்தத்துவாபிமானம் பலாபேக்ஷை இவைகளின்றி சகல பாவ கர்மங்களை விட்டு சகல புண்ணிய கர்மங்களை மனப்பூர்வகமாய்ச் செய்து, அச்செயல்களை பகவத் ப்ரீதியாக்கி, தான் எந்த காரியத்திலும் பட்டுக்கொள்ளாமல் பகவானை முன்னிலைப்படுத்தி தான் ஒதுங்கி நிற்பது. இதற்கு உபரதி யென்று பெயர். (உபரதி = விடல், வெறுத்தல்)

நான்காவது சீதோஷ்ணங்களைப் பொறுத்துக் கொள்ளுவது என்றால் குளிரையும் சுடுகையும் பொறுப்பதன்று. பிராரப்த வசத்தினால் எந்த வேளைக்கு எது வருமோ அதை அனுபவித்தே தீர வேண்டுமென்று கருதி, சகலமும் நஷ்டமாவதைப் பற்றிய வாட்ட

மும், யாவும் வருகிற தென்பதைப் பற்றிய மகிழ்ச்சியுமில்லாமல், சமபுத்தி யுடனே இருப்பது. இதற்குத் திதீக்ஷை என்று பெயர். (திதீக்ஷை = சகித்தல்)

ஐந்தாவது அப்போதைக்கப்போது விவேகத்தினால் திருப்பப் படும் மனமும் இந்திரியங்களும் வாசனை வசத்தாய் வரப்பட்ட விஷயங்களிடத்தே போக அடிக்கடி கிளம்பும். அதனை அவ்விஷயங்களிற் செல்லவொட்டாது தடுத்துத் தடுத்து அருள்நிலையில் நிற்க வைத்து, மனம் அவ்வாறே தான் (விவேகம்) கோரிய விடத்தில் நிற்கிறதா வென்றும் எவ்வளவு காலம் நிற்கிறதென்றும் அறிந்து தினே தினே விருத்திசெய்து வருவது. இதற்கு சமாதானம் என்று பெயர்.

ஆறாவது குரு, கடவுள், வேதவாக்கியம் இவைகளின் மீது பக்ஷம் அதாவது மனதிற்குப் பூர்வம் யாதொன்றி னிடத்திருந்த விஸ்வாசம் ஆசை இவற்றைத் திருப்பி ஈசுவரனிடத்தும், குருவினிடத்தும், ஞானசாத்திரங்களி னிடத்தும் நிலைக்கச்செய்தல். இதற்குச் சிரத்தை யென்று பெயர்.

அப்பா! இவைகள் விராகத்தால் உண்டாவனவாம். ஆகவே, இவ்வாறு உட்டெளிவுகளை சமாதி ஷட்க சம்பத்தி என்பர் ஆய்ந்தோர். இனி முமுக்ஷுத்வத்தைப் பற்றிச் சொல்லுவோம்.

(தொடரும்)

---

## ரஸிகரஞ்சனமாலா.

பகவத் ஸந்நிதானத்தை யடையப் பலவழிகளிருப்பினும், யோக மார்க்கத்தைப்போல் சிறந்தது எதுவும் இல்லையென்று பதஞ்சலி மகரிஷி கூறியிருக்கிறார். நாடிய ஊரை யடையவேண்டியவன் அதற்குச் செல்லும் வழியைக் கண்டு பிடியாமல் அலைவது வீணுக்கிடமாதல்போல், ஈசுவரகிருபையைப்பெற விரும்புவோன் யோகாப்பியாஸம் செய்யாமல் வேறு வழிகளை யநுஸரிப்பது வியர்த்தமேயாம். இக்காலத்தார் யோகநூலைப் படித்தால்மட்டும் யோகியாய் விடலாமென்றெண்ணி வீண் பிரமை கொள்கின்றனர். தமக்குத்தாமே மடமடவென்று படித்துவிடக் கூடிய புஸ்தகங்களைப்போல, யோகங்களைப் பற்றிக்கூறும் புத்தகமும் பயன்படுமென்றெண்ணி விலைகொடுத்து வாங்கித் தம்மிடம் வைத்துக்கொள்ளும் கனவான்கள் பலருளர்.

"குருவில்லா வித்தை பாழ்" என்பதை இவர்கள் மறந்தனர் போலும்!

* * * * *

முற்காலத்தில் கிருகஸ்தாசிரமத்திலிருந்து பற்பல சுகங்களை யநுபவித்துக் கடைசியில் விரக்திகொண்டு ஹிமாசலம்சென்று குகைகளிலிருந்து அநேகர் யோகாப்பியாஸங்களைச் செய்து சந்தோஷ சித்தர்களா யிருந்தனர். இக்காலத்தில் அத்தகைய உண்மையான யோகிகள் இருப்பது அருமையாய்விட்டது. நாகரீகம் முற்றுந்தோறும் காமக்குரோதாதிகள் அதிகரித்து பவித்ரமான மனதை அந்தகாரத்தில் அமிழ்த்தி விடுகிறது. ஆரம்பத்தில் மனிதன் ஐந்துவித இயமங்களை யநுசரிக்கவேண்டும். அவைகள் போகமெனும் மாடிக்குப் படிகளென்னலாம்.

* * * * *

ஐந்துவிதமான இயமங்களில் அஹிம்ஸை யென்பதொன்று. ஸகலதர்மங்களிலும் சிரேஷ்டமானது அஹிம்ஸை யென்று சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன. உலகத்திலுள்ள மதங்களெல்லாம் அஹிம்ஸை யென்னும் அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு மதத்திலும் அஹிம்ஸை முக்கிய கொள்கையாகும். எக்காலத்திலும் எத்தேசத்திலும் மனிதன் தன்னைப் பிறர் ஹிம்ஸிக்க இஷ்டப்படான். ஆகவே, தானும் பிறரை ஹிம்ஸிக்கக்கூடாதென்பதை யறிந்து அவன் அனுஷ்டிக்க வேண்டும்.

* * * * *

அஹிம்ஸையானது மூன்றுவகைப்படும், காயத்தால் ஹிம்ஸை செய்யாமலிருப்பது. வாக்கினால் ஹிம்ஸை செய்யாமலிருப்பது. மனதால் ஹிம்ஸை செய்யாமலிருப்பது. இம்மூன்றில் முதல்வித ஹிம்ஸையைப்பற்றிக் கூறுவோம். இது காயத்தால் ஹிம்ஸை செய்வது. (காயம்—சரீரம்.)

* * * * *

நாகரீகம் அதிகமென்று கருதப்படும் ஐரோப்பாவில் வருஷமொன்றுக்கு பன்னீராயிரம் டன் ஆட்டிறைச்சியை ஜனங்கள் உட்கொள்ளுகிறார்கள். (அமெரிக்கா) யுனைடெட்ஸ்டேட்ஸில் மாட்டிறைச்சிக்காகக் கணக்கற்ற திரவியம் செலவாகிறது. இவற்றை யோசித்தால் நாகரிகர்கள் என்ற பெயரைத்தாங்கிப் பிராணி ஹிம்ஸை செய்வோரின் காரியத்தைப்பற்றி ஆச்சரியம் அடைகிறோம். ஜீவகாருண்யமென்பது பிறந்த விடமாகிய இந்தியாவிலும் இப்போது பிரதி

தினமும் ஒவ்வொரு பிரதான நகரிலும் ஆயிரக்கணக்கான ஆடுமாடுகள் வதை செய்யப்படுகின்றன.

* * * * *

அப்பிராணிகள் உயிரை விடும்போது செய்யும் கோரசப்தம் காதைத் துளைக்கவில்லையா? மனுஷ்யனுடைய மனதைப் பிளக்கவில்லையா? ஆயினும் தன் நாக்கின் ருசியே பிரதானமென்று ஜீவவதை புரியும் மனுஷ்யனுடைய கை கொடிதன்றோ? அது ஸ்பரிசிக்கத்தக்கதாமோ? உடலைவிட்டு உயிர் பிரியும்போது உண்டாகும் அவஸ்தையைக் கண்ணுற் கண்டவுடன் ஜீவஹிம்ஸை செய்ய எண்ணுவானு? அவன் மனம் கல்லென்றல்லவோ சொல்லவேண்டும். "வேறொன்றையொருவர் கொல்லின் அந்நேரமையோவென் முகம் வாடி நிற்பதுவுமையநின் னருளறியுமே......" என்றார் தாயுமானவர்.

* * * * *

இரண்டாவது வாக்கினுல் பிறரை ஹிம்ஸிப்பது. நம்முடைய மனதில் உதிக்கும் எண்ணத்தைத் தெரிவிக்க இரண்டு வழிகளுண்டு. ஒன்று இனிய சொற்களால் தெரிவிப்பது. மற்றொன்று கடுஞ்சொற்களால் அறிவிப்பது. ஒருவனை ஒற்றைக்கண்ணு வென்றால் அவன் உடனே கோபங்கொள்ளுகிறான். அப்படியின்றி, உன்னுடைய கண்களிலொன்று பார்வையை யிழந்ததற்கென்ன காரணமெனில், அவன் கோபங்கொள்ளாமல் அதற்குரிய காரணத்தைச் சொல்லுகிறான். மனிதன் எப்போதும் இனியவார்த்தைகளையே வழங்க வேண்டும். பிறர் மனதைப் புண்படுத்தக்கூடிய சொற்களை உபயோகிக்கலாகாது. கடுஞ் சொற்களைக் கூறுவதால் பிறர் மனம் புண்படுவதோடு நம்முடைய மனமும் கேட்டை யடைகின்றது. நாக்கு நான்கு வித அபராதங்களைச் செய்வதாய்ப் பெரியோர் கூறுகின்றனர். ஒன்று வன்சொற்களை வழங்குவது, ஒன்று பொய் கூறுவது, ஒன்று பின்னுல் நிந்திப்பது, இன்னொன்று அபோக்கியமான அதாவது அர்த்தமில்லாத வார்த்தைகளைச் சொல்வதுமாம். எப்போதும் பக்ஷத்தைத் தெரிவிக்கும் இன்பகரமான வசனங்களையே சொல்வதென்ற ஸங்கல்பம் செய்துகொண்டு அதன்படி அனுஷ்டிக்கக் கடவோம்.

* * *

மூன்றாவதாய் நாம் கூறும் மனமே யாவற்றிற்கும் காரணம். குணமும் செய்கையும் காரியங்களாகும். அதனுல்தான் "மனம்

போல வாழ்வு" என்று கூறப்படுவது. மனதால் நினைத்த பிறகே வாக்கும் தேகமும் தொழில்செய்கின்றன. ஆதலால் மனதில் சாந்தமும், கருணையும், இரக்கமும், உண்டாயின் இன்னொரு உயிருக்கு ஹிம்சையுண்டாக்க வழி நேராது.

---

## திருவள்ளுவ நாயனார் நிலைமை.

திருவள்ளுவநாயனாரது சமைய நிலைமையைப்பற்றி தேசத்திற் பலரும் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். அவர்களிலும், தக்க அறிஞர்களாகிய சிலர், நாயனாரை, சைவசமையத்துள்ளாரென்று தக்க காரணங்களோடு நிலைநாட்டியும் சிலர் அருக சமையத்துள்ளாரென்று தகுந்த காரணங்கள் காட்டி ஸ்தாபித்தும் வற்புறுத்துகின்றனர்.

அங்ஙனம் வற்புறுத்திக்கூறும் அறிஞர்களது ஆராய்ச்சியின் வன்மைத்தன்மையும் ஆழ்ந்த அறிவின் விசாலத்தன்மையும், எனது மனதை மிகமகிழ்விக்கின்றன. ஆனாலும், நாயனாரைப்பற்றி, அவர்கள் வற்புறுத்திக் கூறி யிருக்கப்பட்ட கூற்றுக்களைக் கொண்டு அவர்கள் கூறியிருக்கிறபடி நாயனாரை, ஒருதலையாய்த் துணிந்துகொள்ள எனது மன மிடங்கொடுக்கவில்லை. என்னெனின்,

மறைந்துகிடக்கும் ரகசியவழிகளை விளங்க வெளிப்படுத்துதலும், இல்லாத வொன்றை யுண்டென்று நிலைநாட்டுதலும், உள்ளதான வொன்றை யில்லையென்று மறுத்துறுதிப் படுத்துதலும், இதுபொய் இதுதான்மெய் யென்று உள்ளதைத் தெளிந்திருந்தாலும் ஒரு சமையம் தன் மெய்மறந்து அந்தப் பொய்ம்மையானது வாயிற் றோன்றிப் பிறந்துவிட்டால் அதைத்தானே மெய்ம்மையாகச் சாதித்தலு மாகிய விவைகளெல்லாம் கற்றுணர்ந்த வாய்வல்லோரது கல்வியைப் பொறுத்ததாகும். அதனால்,

உண்மையாய்ப் பார்க்குமிடத்து நாயனார், கடவுளை 'மலர் மிசையேகினா' னென்றதற்கு பரிமேலழகர் இருதய கமலமலரில் மேவினா னென்று ரென்றதையும், 'எண்குணத்தா' னென்றதற்கு தெய்வப் பொதுவிலக்கணப் பெயராமென்று ரென்றதையு மறுத்து, நாயனாரை யருகரே யென்று நிலை நாட்டப்பட்டிருந்தாலும், நாயனார், கடவுளை, 'மலர்மிசையேகினா' னென்றுரென்றதையும் 'எண்குணத்தா' னென்று ரென்றதையுங் கொண்டு அருகரென்று நாட்டப்பட்டதை மறுத்து, நாயனாரை, உக்கிரப் பெருவழுதி முதலாயினோர், "நான்முகத்தோ"

னென்றுரென்றதையும் "அந்தாமரைமேலைய" னென்று ரென்றதையும், நாயனார் "பூவிலயனு" மென்றெடுத்து நடராஜ மூகூர்த்தத்தைப் புகழ்ந்து பாராட்டியிருக்கின்று ரென்றதையுங் கொண்டு சைவ சமையத்தினரே யென்று நிலைநாட்டப் பட்டிருந்தாலும், நாயனார் அவ்விரண்டனுள்ளும் அடங்கப்பட்டில ரென்பதே யெமது துணிபாகின்றது.

என்னெனில், நாயனாரை, யொவ்வொரு சமையத்தினரும் தங்கள் தங்கள் சமையத்தினரென்று கொண்டு நாயனாரையும், நாயனாரது திருக்குறளையும், நாயனாரது திருக்குறள்களின் கருத்துக்களையும் அருமையாக வெடுத்துப் புகழ்ந்து பாராட்டி யாண்டு வருகின்றனர். அங்ஙனமெடுத்துப் பாராட்டி யாண்டு வந்தாருள் சிலரை யாராயுமிடத்து, தகுதியோடு சைவசமையத்தையே மெய்யென்று ஸ்தாபிக்கும் வைராக்கிய சித்தத்தையுடைய கல்லாட முனிவர், தாம் கூறியுள்ள கல்லாட மென்னும் அரியநூலினுள், நாயனாரைப் பற்றியும் நாயனாரது குறளைப்பற்றியும் நாயனாரது உண்மையைப் பற்றியும்,

"சமையக்கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்" என்றார்.

இதில், சமையக்கணக்கர் மதிவழிகூறாது, என்றதையும் பொருளிது, வென்றதையும் மேற்கவனிக்க வேண்டுமிடத்திற் கவனிக்க வேண்டியதே யல்லாமல் இங்ஙனம் ஆக வேண்டியது ஆவசிய மின்மையாலவைநிற்க, மற்றவைகளை யாராயுமிடத்து, முக்கட் பெருமான் நாயனாரையும் நாயனாரது குறளையும் நாயனாரதுண்மையையும், ஏனைய புலவர்க ளெல்லா மொப்புக்கொண்டு சிறப்புக்கவிகள் பின்னர்க்கூறும் ஏதுவாக, தான் முதல் முதல் ஒப்புக்கொண்டு,

"என்றும் புலராதி யாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போல்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்" என்றார்.

என்று கடவுளரா லியற்றப்பட்ட பாசுரத்தை யெடுத்துக்காட்டிச் சிறப்பித்துப் புகழ்ந்திருக்கின்றார். ஆனால், நாயனார்மீதும் திருக்குறள் மீதும் கல்லாட முனிவர் கொண்டிருக்கின்ற சமையச் சிறப்போடுற்ற அன்பு எவ்வளவு மேற்பட்டதாக விளங்குகின்றது பாருங்கள்.

அவரே யன்றியும், எச்சமையங்களையும் வாதித்து மறுத்து தமது சமையத்தையே நிலைநாட்டத்துணியும் வீரசைவசமையத்தின ராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர், தாமருளிச்செய்த திரு வெங்கைக்கலம்பகத்தில், நாயனுரைப் பற்றியும் திருக்குறளைப்பற்றி யும் நாயனுரது மேலான நிலைமையைப்பற்றியும்,

" என்னடிகள் வெண்குறளே ரடியிரண்டு
மென்றலையி லிருத்துமிறை வெங்கைநாட்டின்
முன்னடிக ளிரண்டுநெடி லடிகள் பின்னர்
முயங்கடிக ளிரண்டுநே ரடிகளாகப்
பன்னடிக ளொருநான்கு கொடுநடக்கும்
பழுதகல்வெண் டுறைபோலப் படர்தலாலே
பின்னடிக ளெங்கள்திரு வடிகள் பின்னர்ப்
பெயர்ந்தவடி யெழிலிளஞ்சே யடிகளாமே "

என்றார். இதில் முன்னடிக ளென்றது முதலாவுள்ள விடங்களிற் கிடக்கின்ற, அகப்பொருள் வழக்கின், உடன் போக்குச் சுரத்துய்த் தபின்கண், சுரத்திடைச் செவிலி தான்கண்ட தலைவன் தலைவியாது அடிச்சுவடு நான்கிற்கும் உவமான மெடுத்துக்காட்டிய வெண்டுறை யிலக்கண முதலிய விஷயங்களை யிங்கு ஆராயவேண்டிய தாவசிய மின்மையாலவை நிற்க, இங்ஙனமெடுத்துக் கொண்டதற் கவசியப்பட் டமையை யாராயு மிடத்து, அடியார் தாசர் அடிக ளென்பனவெல் லாம் பொதுவாகச் சமைய குரவர்கட்கெல்லாம் பொதுப் பெயராத லால், நாயனுரை தமக்குக் குரவர்போலுமென்பது தோன்ற, என் அடிகளென்றுயர்த்திக் கூறினர். நாயனுரருளிய திருக்குறளடி யிரண் டுகளையும், பாட்டுடைத் தலைவராகிய கடவுளரடிகளிரண்டிற்கு முவ மானமாக்கிக் கொண்டார். இவைகளையே யின்னும் ஆராயுமிடத்தில், தொண்டரை வழிபட்டுக் கடவுளை வழிபட்டால் ஒழியப் பயன்படா வென்பது சைவசமையக் கோட்பாடாதலால், அதைப் பொறுத்து நாயனுரை யுயர்த்தியமைபோல, கடவுளரடிகளுக் குவமானமாகக் கொண்ட திருக்குறளடிகளையு முயர்வுபடுத்த வேண்டாமோ வெனில், உவமானம்; " உயர்ந்த தன்மேற்றே யுள்ளுங்காலை " என்ற விதிப் படி யியல்பாக வுயர்வே பெற்றன. இவ்வாறு, நாயனுரும் குறளு முயர்வு படும்படி யமைத்துச் சிறப்பித்தாரானல், முனிவர், நாயனு ரைக்கொண்டிருக்கின்ற பெருந்தகைமையும், நாயனர்மீது பற்றியிருக் கின்ற அன்பும், நாயனுரது திருக்குறள்மீது வைத்திருக்கின்ற அபிமா

னமும் இவ்வளவென்று அளந்தொருவருரைத்தற்கில்லாத வண்ணம் வெள்ளிடைமலைபோல விளங்குகின்ற தல்லவா,

அவைபோல வைணவ சமையத்தாரார் புகழப் பெற்றதையும் ஆராயுமிடத்து, வைணவர்களிற் பாரதம்பாடிய பெருந்தேவனர், திருவள்ளுவ மாலையில்,

" எப்பொருளும் யாரு மெளிதி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டமறை
நேர்வனமற் றில்லை நிகர் " என்றார்.

இதில், எப்பொருள்களும் அடங்கப்பட்டது திருக்குறளென்றும், பார்ப்போர் யாரும் அவ்வெப்பொருள்களையு மெளிதிலுணர முடியுமென்றும், இப்பெருமைவாய்ந்த திருக்குறள், வைணவ சமைய நூல்களாகிய பாரதமும் இராமாயணமும் பொதுவான மனுதன்ம சாஸ்திரமும் பழமையான வேதமுமாகுமென்றும் அமையவெடுத்துக் காட்டிப் பாராட்டினாராயின், பெருந்தேவனர், நாயனாரையும் நாயனார் திருக்குறளையும் தமது சமையப்பற்றி லெவ்வளவு பெருமை யாகக் கொண்டு சிறப்பித்துக் கைக்கொண்டிருக்கிறாரென்று விளங்குகிறது பாருங்கள்.

இனிபுத்த சமையத்தாரார் பாராட்டப்பட்டதுண்டோ வென்றாராயுமிடத்து, புத்தசமையத்தில் மேன்மைப்பட்ட கூலவாணிகன் சாத்தனார், தாமியற்றிய மணிமேகலைநூலுள் சிறைசெய்த காதையில் தெய்வங்கேட்பித்ததாக:

" மாபெருந்தெய்வந்தோன்றி மடக்கொடிநீகேளென்றே
நேரிழைக்குரைக்கும் தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுமவள்
பெய்யெனப்பெய்யும் பெருமழையென்ற வப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் " என்றார்.

இதில், நாயனாரைப் பொய்யில்லாத மெய்ப்புலவனென்று சிறப்பித்துப் பாராட்டியும் அந்நாயனார் கூறிய குறளின் பொருளுரையைத் தெளிவாயாகவென்று, திருக்குறள் வாழ்க்கைத் துணை நலத்துள்,

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை "

என்னுங்குறளை, சிலநீக்கல் அடைகளோ டெடுத்துக் காட்டிப் பாராட்டியும், இவ்வாறே பலபல விடங்கள் தோறும் நாயனாரையும்

நாயனார் திருக்குறள்களையும் திருக்குறட் கருத்துக்களையும் பத்தியோடெடுத்துச் சிறப்புறப் புகழ்ந்தாண்டு வந்திருக்கிறாரென்பதுந் தவிர, திருவள்ளுவ மாலையி லிவரே நாயனாரைப்பற்றி,

" மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடையமன்னர் தடமுடிமேற் றாண்றே
பாமுறைதேர் வள்ளுவன்முப் பால் " என்றார்.

இதனை வற்புறுத்தி, அம்மாலையிற்றானே மருத்துவன் தாமோதரனார்,

" சேந்தநீர் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவன்முப் பாலாற்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு " என்றார்.

இவற்றுள், முன்னையதில், தமிழ் நாட்டரசர்களாகிய மூவேந்தரும், நாயனாரது திருக்குறட்பொருளை, தங்கள் தங்களது ராஜ்யபாரம் நடத்தும் நீதி நூற் சட்டமாகக் கொள்ளத் தக்கதெனச் சிறப்பித்தவாறும், பின்னையதில், கூலவாணிகன்சாத்தனார், வழுவுடைய கல்வியோரைக்கண்டு பொறாராய் தம்தலையில் சீயொழுகிக் குத்த லெடுக்கத்தக்க புண்ணுண்டாகும்படி புடைத்து அதுகாரணமாய் சீத்தலைச்சாத்தனாரெனப் பெயர்பெற்றாரென்றும், அங்ஙனம் வழுக்காணும் சீத்தலைச்சாத்தனார் தலைப்புண்தீர்க்கும் அருள்மருந்து போலும் வழுவற்றெழுந்தது திருக்குறளென்றும், இத்தகைய வழுவற்ற குறளை யருளிச்செய்தார் நாயனாரென்றும், அந்நாயனார், அச்சீத்தலைச் சாத்தனாராலும் புகழப்பட்டாரென்றும் விளங்கக் கிடக்கின்றவாறும் காணில், இவர்கள் நாயனாரையும் நாயனாரது அருட்பெரு நிலைமையையும், நாயனாரது தமிழ்வேதத்தையும் மதித்திருக்கின்ற மதிப்பு இனைத்தெனப்படாவண்ண முயர்வென்பது உள்ளங்கையினெல்லிக்கனி போலத் தெள்ளிதின் விளங்குகின்றதல்லவா.

அன்றியும், அப்புத்த சமையத்தினராயுந் துறந்த ஞானியராயுமுள்ள திருத்தக்கதேவர், தாமியற்றியுள்ள சீவகசிந்தாமணியில், நாயனார் தமிழ்வேதத்தைப்பற்றி,

" தொழுததம் கையினுள்ளுந் துருமுடி யகத்துஞ் சோர
வழுதகண் ணீரினுள்ளு மணிகலத் தகத்து மாய்ந்து

பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுட னொடுங்கும் பற்று
தொழிகயார் கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார் விளிகுற்றாரே. ''

என்றார். இதில் திருக்குறள் கூடா நட்பு,

" தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண்ணீருமனைத்து "

என்னும் குறளைச் சில அடைகளோடு விரித்தாண்டிருக்கின்றமையும்

" வீடுவேண்டி விழுச்சடை நீட்டல் மெய்ம்
மூடு கூறையின் மூடுதல் வெண்டலை
யோடு கோட லுடுத்தலென் றின்னவை
பீடிலாப் பிறவிக்குவித் தென்பவே '' என்றார்.

திருக்குறள் கூடாவொழுக்கம்;

" மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின் ''

என்னுங் குறளை சில அடைதொகைகளோடு விரித்தெடுத்தாண்டு கொண்டமையும், மற்றுமிவ்வாறே பற்பலவிடங்களிலும் பலசமையத்தோர்களும், நாயனாரையும் நாயனாரது தமிழ்வேதத்தையும் விரித்தெடுத்துப் புகழ்ந்து பாராட்டப்பட்டனவெல்லாம் விரிக்கிற் பெருகும். (இன்னும்வரும்)

## ஒரு மழைத்துளியின் சரித்திரம்.

ஒரு மழைத்துளி ஆகாயத்திலிருந்து பெருங்கடலின் அலை முகட்டில் விழும்பொழுது 'அந்தோ ! நான் அநியாயமாய் இந்தப் படுகுழியில் வீழ்ந்தாழ்ந்து மாண்டு போகிறேன்' என்று அலறியது. ஆயினும், 'தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது' என்றபடி அது அங்குள்ள ஒரு சிப்பியில் வீழ்ந்து அழகிற் சிறந்த ஒரு தெள்ளிய முத்தாயிற்று. தான் இவ்வாறு மாறியது கண்டு அது களிப்புற்றது. பின், சிறிது காலத்திற் கெல்லாம் முத்துக் குளிப்பவர்கள் அதனை வலைபோட்டுப் பிடித்திழுக்கையில், அது, 'ஐயோ ! கொடுமை, நான் செத்தேனே!' என்று முன்போலவே மீண்டும் ஓலமிட்டது. ஆயினும் அது ஆணி முத்தாதலால் அதனை வணிகர் கண்டு கொண்டாடி அரசனிடம் கொண்டுபோய்க் கொடுத்தனர். அவ்வரசன் அதற்கு இணையானது எங்கும் இல்லை யென்று அறிந்து மகிழ்ந்து அதனைத் தன் கிரீடத்திற்கு அணியாக அதன் உச்சியில் வைத்துக் கொண்டான்.

இவ்வாறு அம் மழைத்துளியானது மன்னர் குழாம்வந்து அடி பணியும் வேந்தன் முடிமேல் ஏறும் பெரும்பேறு தனக்கு உண்டான தைக்கண்டு, இது எனக்கு எங்கும் நிறைந்த பரம்பொருளின் பேரருளால் உண்டாயிற்று என்று கடவுளைத் துதி செய்தது.

இதனால் ஆரம்பத்தில் எவ்வளவு கஷ்டத்தோடு உழைக்கின்றோமோ அவ்வளவும் பின்னால் உயர்வை யடைவோம் என்று தெளிவாய்த் தெரிகிறது.

---

## தெய்வ பக்தியின் மகிமையை விளக்கும்

### ஒரு சிறு கதை.

சீரனூரில் கந்தன், இராகவன் என்னு மிரு வாலிபரிருந்தனர். இவர்கள் இருவரும் சேர்ந்து பக்கத்தூரில் நடந்த ஒரு திருவிழாவுக்குக் கால் நடையாகச் சென்றனர். கந்தன் கடவுளிடத்தில் அன்புடையவன். களங்கமில்லாத மனமுடையவன். பெரியரிடத்து அடக்கமும் உண்மை பேசும் உயர்குணமு முடையவன். இராகவன் மந்தமதி யுடையவன். உடலை வளர்க்கும் சோம்பேறி. நற்குண நற்செய்கை யுடையவனல்லன். இவர்கள் இருவரும் பல பேச்சுக்கள் பேசிக்கொண்டு செல்கின்றனர். பல பேச்சுக்கள் பேசிக்கொண்டு சென்றபோதிலும் கந்தனுடைய சிந்தனை யெல்லாம் கடவுளிடத்திலேயே யிருக்கின்றது. அவருடைய திருவோலக்கம் காண ஆவலுடையவனாகவே யிருக்கின்றான். இராகவன் திருவிழாவில் நடக்கும் கூத்துகளையும் கொட்டு முழக்குகளையும் நாட்டியங்களையும் காண விரும்பிப் புறப்பட்டவனாதலால், அவன் மனம் அவனுடைய பேச்சுகளிலேயே ஆனந்த மடைகின்றது.

இப்படி யிவர்கள் சென்றுகொண் டிருக்கையில் வழியிலே ஓர் ஆலயமிருந்தது. கந்தன் அவ்வாலயத்தைக் கண்டதும், "இராகவா! வா நாம் போய் இவ்வாலயத்தை வலம் வந்து கடவுளைத் தரிசித்துக் கொண்டு பிறகு செல்வோம்" என்றழைத்தான். இராகவன், வெறுப்போடு கந்தன் முகத்தைப் பார்த்து, "போடா மடையா! எப்போது பார்த்தாலும் சுவாமி, கோயில் என்று கூறிக்கொண்டு அலைவது தான் உனக்கு வேலை நான் வரவில்லை ; எனக்குக் கால் வலிக்கின்றது. நானிங்கிருக்கும் இந்த ஆலமரத்து நிழலிற் படுத்துக்கொண்டிருக்கின்றேன் ; நல்ல காற்றடிக்கின்றது. நீ கோயிலுக்குப்போய்

4

உன் சாமியைக் கும்பிட்டுவிட்டு வா" என்று கூறினான். கந்தன் நகைத்து, "அப்படியானால் நீ யிங்கேயே படுத்திரு; நான் போய் சுவாமி தரிசனஞ் செய்துவிட்டு வருகின்றேன் ஒரு நொடிப்போதில்" என்று சொல்லிக் கோயிலுக்குச் சென்று கோயிலை வலம் வந்தான். அப்போது அவன் காலிலே ஒரு பெரிய முள் அழுந்தப் பாய்ந்து விட்டது. அதைப் பிடுங்கி யெறிந்துவிட்டு "என் ஆண்டவனே! எல்லாமுன் செயலென நம்பினேன்; துன்பம் வந்த காலத்திலும் இன்பம் வந்த காலத்திலும் உன் திருவடி மறவேன்" என்று சிந்தித்துக் கொண்டே வலம் வந்து ஸந்நிதியை யடைந்து பணிந்தெழுந்து இராகவனிடம் வந்தான். இராகவன் ஆனந்தக்கடலில் மூழ்கியவன் போலப் படுத்துக்கொண் டிருந்தான். கந்தன் நொண்டிக் கொண்டே அவனிடம் போனான். அதைக் கண்டதும் இராகவன், "அடே! கோயிலுக்குப் போய் சுவாமியைக் கும்பிட்டதற்குப் பலன் கிடைத்ததுபோ லிருக்கின்றது. அட மூடா! உன் புத்தியை யென்னென்று கூறுவது?—இதோ பார் என் கையிலிருக்கும் ரூபாயை இந்த ரூபாய் எனக்கு எப்படி கிடைத்தது தெரியுமா? இங்கு மணலைக் கிண்டிக்கொண்டு என் மனப்போக்கின்படி தெம்மாங்கு பாடிக்கொண் டிருந்தேன். இங்கிருந்து கிடைத்தது. தெம்மாங்கு பாடியதிற் கிடைத்த பயனைப் பார்த்தாயா? சாமியாவது பூதமாவதடா? மூடப் பயல்களுடைய பேச்சல்லவா அது!" என்று நகைத்துக்கொண்டே யெழுந்தான். கந்தன் அதைக் கேட்டதும் "என் பொல்லாத காலத்தினால் என் காலில் முள் தைத்தது. உனக்கு நல்ல காலமிருந்தது; ரூபாய் கிடைத்தது"—என்று கூறி, எழுந்திரு போவோம் என்றான். இராகவன் எழுந்து பெரு மகிழ்ச்சியுடன் புறப்பட இருவரும் சென்றனர். கந்தன் இந்த மூடன் என்னைக்கண்டு நகைத்துக் கேலி செய்வதா? உன் அடிமையல்லவா இந்த எளியேன்?—கடவுளே சரணம்!—என்று மனத்திற்குள் கூறிக்கொண்டு ஈசனை நினைத்தான். அப்போது ஆங்கொரு ஸந்நியாசி எதிரே வரக்கண்டனன். அவரை நெருங்கியதும் கந்தன் பெரியாரை வணங்கு மியல்புடையவனாதலால் அவரை அன்போடு வணங்கி, அவரிடம் நடந்த செய்தியைக் கூறினான். அவர், கந்தன் முகத்தைப் பார்த்து, "அப்பா! தேவரகசியத்தை நீங்களறியமாட்டீர்கள். இன்று உனக்கு மரணம் நேரிடவேண்டிய நாள். இந்த நாளில், கோயிலை வலம் வந்து கடவுளைப் பணியவேண்டு மென்கிற

எண்ணம் உனக்குதித்து அவ்வாறே செய்தமையினுல் உனக்கு நேரிடக்கூடிய மரணமானது இப்படிச் சிறிய கஷ்டத்தோடு முடிந்தது. கடவுளை நம்பினேர் கஷ்டம் மலைபோன்றதெனினும் அது பனிபோல மாறும். உன் நண்பனுகிய இவனுக்கு இன்று பெரிய புதையல் கிடைக்கவேண்டிய சமயம் இவன் கடவுளையும் ஆலயத்தையும் இகழ்ந்தான். அதனுல் இவனுக்கு ஒரு ரூபாயோடு போயிற்று. இது இரகசியம்! எந்தக் காலத்திலும் கடவுளை மறவாமலிருந்து நல்ல காரியங்களைச் செய்து வரவேண்டும். அப்படி யிருப்பவன் ஒரு போதும் பெருந்தீங்குக் குட்படமாட்டான். அவனிடம் ஈசன் கருணை பாலிப்பார்—என்று புத்திமதி கூறி யனுப்பினர்.

---

## "தந்தை தாய்ப் பேண்"

தாய்தந்தைகளைக் காப்பாற்று என்பது இதன்பொருள். தந்தையானவர் ஊணும் உடையுந் தந்து, துஷ்டசகவாசம் செய்யவாவது, ஓடி யொளித்துத் துஷ்டனுய்த் திரியவாவது, சூதாடிப் பொய்பேசிப் ஏங்கூறவாவது, தாசிகாந்தனுய் வேசி வீடு நுழையவாவது, துர் வியாச்சியந் தொடுக்கவாவது தன்னிச்சையாய் விடாமல் அடக்கி,

விருத்தம்.

" அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு
மாடையு மாதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு
மென்னைக் குறித்ததல்வால்
துள்ளித் திரிகின்ற காலத்தி
லேயென் றுடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை
யாகிய பாதகனே "

என்று நினைத்துப் பின்பு தான் விசனப்படுவதற்கு ஏதுவாகத்தன்னை மூடனுய்ப் போகவொட்டாமல், இதந்தெரிந்து ஐந்துவயதிலே கல்விக் கழகத்திலே விடுத்துப் பூரண பண்டிதனுகக் கல்வி பயிற்றுவித்து, சபையாரெல்லாம் பூஜ்யதை பண்ணத்தக்க யோக்யதையாகும்படி செய்ததையும் செய்வதையும் மறவாமல்;

அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்
மாதாவையொருநாளும் மறக்கவேண்டாம்
தாயிற்சிறந்ததோர் கோயிலுமில்லை
தந்தைதாய்ப் பேண்

தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
தாய்சொல்துறந்தால் வாசகமில்லை.

என்ற ஆன்றோர் அருள்வாக்கினாலும்,

1. மாதா பிதாவை வணங்கு—நாளும்
ஆதாரமாகவே அவர்சொல்லுக் கிணங்கு
2. தந்தைதாய் சாபம் பொல்லாது—அவர்
சிந்தை நொந்தால் மக்கள் செல்வந்நில்லாது
3. மாதாபிதாவுக்குத் துரோகம்—செய்யும்
பாதகரைச்சுற்றும் பாவம் அநேகம்
4. பெற்றவர் நேசத்தைத் தேடு—அவர்
குற்றத்தை நீக்கிக் குணத்தைக்கொண்டாடு
5. உள்ளதாய் தந்தைக்குத் தீங்கு—செய்யும்
பிள்ளையைத் தன்பிள்ளை யேபழி வாங்கும்
6. கடலைப்போல் மாதா சகாயம்—அதற்
குடலைச் செருப்பாய் உதவலும் நியாயம்

(மாதா பிதாவை)

என்ற பெண்மதிமாலையின் பேரொலியாலும் அவர்களைத் தெய்வமாக வெண்ணி இகழாமல் வணங்கி, அவர்களுக்குக் கீழமைந்து, அவர்களுடைய குற்றங்களைப் பிறரறியாது மறைத்து, அவர்கள் சொல்லைக் கடவாமல் ஸ்ரீராமபிரானைப்போல் மாதிரு பிதிருவாக்கிய பரிபாலகனாய், தாய்தந்தையர் தன்னை அன்னவஸ்திரங்களிற் குறைவில்லாமற் போஷித்ததுபோல, ஒன்றுங் குறைவில்லாமல் அன்புடனே தானும் அவர்களைப் போஷிக்கவேண்டும். பெற்றவர்களுக்குப் புத்திரனன்றிப் போஷகன் வேறு யார் ?

மாதிரு பிதிரு கைங்கரியம் தனக்கு லபிக்கவேண்டுமென்று கடவுளைப்பிரார்த்தித்து, எதிர்பார்த்திருந்து அவர்கள் தேகவியோகமான உடனே அவர்களுக்குச் செய்யவேண்டிய தகனக்கிரியைகளைச் சிரத்தையுடனே நடத்தவேண்டும். தாய் கடன் கழிப்பதற்கு 'சர்வ சங்கபரித்தியாகம்' செய்த சந்நியாசிகளும் காத்திருந்திருக்கின்றார்களே. இதற்குத் திருஷ்டாந்தம்:—

முற்றத்துறந்த பட்டினத்தார் தாய் இறக்குமளவும் காத்திருந்து, அவள் மரித்தபின்பு, வாழைமரங்களைக் காஷ்டமாக அடுக்கி, அதின் மேல் அவளைக்கிடத்தி, வாய்க்கரிசியிட்டு,

"முன்னையிட்டதீ முப்புறத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்

அன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்க மூள்கவே ”

என்று சொல்லிக் கொள்ளிவைத்துக் குடமுமுடைத்துப் பால் தெளித்து உத்தரகிரியைகளும் செய்துமுடித்துச் சென்றாரல்லவா ?

அவ்விதமே, ‘மாதா மனமெரிய வாழா யொருநாளும்’ என்பதை யுணர்ந்தும், ஸ்ரீராமபிரான், யயாதியினுடைய குமாரன் பூரு, பரசுராமர், மிதிலைஜனக மகாராஜனது காலத்திலிருந்த கசாபுக்கடைக்காரன், சந்தன மகாராஜாவின் குமாரராகிய காங்கேயரெனும் பீஷ்மர் இவர்களுடைய சரிதங்களையு முணர்ந்தும் தம் தம் மாதாபிதாக்களை ஆதரிக்கவேண்டுமென்பதே, நம் மூதாட்டியாராகிய ஔவைப்பாட்டியாரின் உறுதிவாக்கியமாகிய ‘ தந்தைதாய்ப்பேண் ’ என்பதின் கருத்து.

இதை நிதர்சனமாகக் காட்டியருளிய முடிவில் கண்டோர்களின் சரிதங்கள் பின்னால்வரும்.

---

## சுத்தம்.

சுத்தமே சிறப்புடையது. சுத்தம் இல்லாவிடில் எதுவும் நன்றாயிராது. சிறுகுழந்தைகள் உடம்பில் புழுதி படியும்படி விளையாடுவது நல்லதென்று சிலர் கருதுவதுண்டு. இது சரியன்று. சரீரம் எவ்வளவுக்கு எவ்வளவு சுத்தமாயிருக்குமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லறிவு உண்டாகும். இதனாலே தான் கடவுளை வணங்குவதற்குமுன் யாவரும் ஸ்நானம்செய்து சுத்தமான வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுகிறார்கள். நமது சரீரமானது நமது ஆத்மா குடியிருக்கும் வீடாதலால் அவ்வீட்டை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருந்தால் மட்டுமே அதில் வாழ்ந்திருக்கும் ஆத்மாவுக்குப் பரிசுத்த முண்டாகும். அன்றியும் சரீரத்தைச் சுத்தமாய் வைத்திருப்பவர்களுக்கு அதனால் எப்பொழுதும் ஏற்றம் உண்டு. குழந்தைகளை நல்லகாற்று வீசும் சுத்தமான இடங்களுக்கு நாள்தோறும் அழைத்துச் செல்ல வேண்டும். நமது சரீரமே யன்றி நாம் வசிக்கும் வீடும் அதனைச் சூழ்ந்த இடங்களும் நிர்மலமா யிருக்கவேண்டும். விடிந்து நெடு நேரம்வரை பல்லை விளக்காமலும் ஸ்நானம் செய்யாமலும் இருந்தால் எவ்வளவு தெளிவான புத்தியும் மந்தமாய்விடும்.

சரீரசுத்தம், வாக்குச்சுத்தம், மனச்சுத்தம் என மூன்றுவகைப்

படும். அவற்றுள் சரீரசுத்தம் முதற்படியாயிருக்கிறது. இதனாலேயே ஓர் ஆங்கிலப் புலவர்

"சுத்தம் தெய்வத்தன்மைக்கு அடுத்தபடியில் இருக்கிறது" என்று கூறியுள்ளார் போலும்.

"Cleanliness is next to Godliness."

---

## முத்து உற்பத்தி.

முத்தானது, 1. கோமேதகம், 2. புஷ்பராகம், 3. வைரம், 4. வைடூரியம், 5. நீலம், 6. மரகதம், 7. மாணிக்கம், 8. பவளம், 9. முத்து, ஆகிய நவரத்னங்களில், ஒன்று.

இதன் பிறப்பிடங்கள் 20. அதாவது முத்தானது இருபது வஸ்துக்களினின்றும் உற்பத்தியாகிறது. அவை யாவன:—

1. கரும்பு, 2. கமுகு, 3. வாழை, 4. மூங்கில், 5. செந்நெல் 6. தாமரை, 7. சங்கு, 8. நத்தை, 9. சிப்பி, 10. மீன், 11. முதலை 12. நாகம், 13. உடும்பு, 14. கொக்கு, 15. பன்றிக்கொம்பு 16. யானைத்தந்தம், 17. பசுவின்பல், 18. சந்த்ரன், 19. மேகம், 20. தேங்காய், ஆகிய 20 வஸ்துக்களிலிருந்து முத்துப்பிறப்பதாய் நம்முதாதையர் சொல்லியிருப்பதுமன்றி நாமும், கர்ணபரம்பரையாய் கேட்டுவருகிறோம். ஆனால், நம்மில் பிரத்யக்ஷத்தில் கண்டவர்கள் சிலரேயாவர். இங்கிலீஷ் படித்தவர்களில் சிலர் மேல்கண்ட 20இடங்கள், முத்துக்குப் பிறப்பிடமென்று சொல்லியிருப்பதை நம்புவதில்லை. ஆனால் முத்துப் பிறப்பிடங்களில் ஒன்றாகிய தெங்கிலிருந்து முத்து எடுக்கப்படுவது உண்மை என்று பின்வரும் சாட்சியங்களால் தெரியவருகிறது. அவையாவன:—

1886-ம் வருஷம் ஸிலிபஸ் (Celebes) என்னும் வடநாட்டில் ரீடல் என்பவர், தேங்காய்ச்சதையுள் முட்டையின் உருப்போன்ற ஒரு சிறியமுத்தைக் கண்டெடுத்தார்.

மேற்கு இந்தியதீவுகளின் அதிபதியாகவிருந்த ஸர்டேனியல் மாரீஸ் (Sir Daniel Morris) என்பவர் இம்முத்து விஷயத்தைப் பற்றி அடியில்கண்டவாறுதெரிவிக்கிறார். அதாவது சுமார் 25வருடங்களுக்கு முன்னால் ஓஷதிசாஸ்திரங்களில் பெயர் வாங்கினவராகிய ரம்ப் (Rumph) என்பவர் டஸ்கனிநாட்டுச் சீமானுக்கு (Duke of Tuscany) தேங்காயின் முத்துப்பதித்த மோதிரம் ஒன்றை அனுப்பி

ஞர். அவர் இரண்டுதேங்காயின் முத்தைப்பார்த்து அவைகளின் பிரமாணம் உருவம் ஜ்வலிப்பு முதலியவற்றைப்பற்றி தன்டைரியில் வரைந்திருக்கிறார் என்று தெரியவருகிறது. பிலிப்பைன் தீவில் இதைப்பற்றி அநேகர் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் அது பார்ப்ப தற்கு கிடைத்ததில்லை. சீனதேசத்தார் இம்முத்துகளை உயர்வாக மதிக்கிறார்கள். ஏனென்றால் அனேகவிதமான வியாதிகளும் பிசாசு களும் இவற்றினால் விலகிப்போகின்றனவாம்.

ஆகையினால் இராஜாக்கள் நவரத்னங்களில் இதை ஒன்றாக மதித்து அதிகவிலை கொடுத்துவாங்கி ஆபரணங்களில் பதித்து தரித்துக்கொள்ளுகிறார்கள்.

இதற்கு ஒருவிதமானநீலவர்ணமுண்டு. இதை "கலாவா" என்று சொல்லுவார்கள். சில வருடங்களுக்குமுன் சுயமான தேங்காய் முத்து ஒன்றை இங்கிலாந்திற்கு ஹிக்ஸன் என்பவர்கொண்டுபோனார். அங்கேயிருக்கிற க்யூ (Kew) பட்டணத்திலுள்ள கவர்ன்மென்ட் தோட்டத்திலுள்ள கண்காக்ஷிசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் வெளுத்து முட்டைவடிவுபோல் இருக்கிறது. இஃ தெவ்வாறு தேங்காயின் சதையில் உண்டாகிறதென்று ஒருவர்க்கும் தெரியவில்லை. நம் முன்னோர்களால் உண்டாக்கப்பட்டிருக்கும் சாஸ் திரங்களையும் நம் முன்னோர்களையும் தூஷித்துத் திரிபவர்களுக்கு மேற்சொல்லியிருக்கும் உதாரணத்தைவிட இன்னும் செப்பவேண் டியது யாதோ !!!

---

## சிறுவர் பக்கம்

## ஓர் அறிக்கை

சிறுவர்களே ! இக்காலத்தில் நாம் உங்களுக்குக் கூறவேண்டிய முக்கியமான புத்திமதி யொன்றிருக்கிறது. இதை நீங்கள் அலட்சி யம் செய்யாமல் கவனித்து உங்கள் சுய நன்மையைக்கருதி நல்வழி யில் நடப்பீர்களென்று நம்புகிறோம்.

சாதாரணமாய்ச் சுருட்டு பிடிப்பது ஒரு துர்ப்பழக்கமே. ஆதி காலத்தில் நமது நாட்டில் இப்பழக்கம் மிக்க குறைவென்றே தெரிகி றது. இப்போது வயது முதிர்ந்தோர்களே பெரும்பாலும் சுருட்டு பிடிக்கிறார்கள். அவர்களுக்கும் அதனால் ஏதோ கொஞ்சம் அனு கூலமிருப்பதானாலும் கெடுதியில்லாமற் போகவில்லை. எல்லா பதார்த்

தங்களிலும் நற்குணம் தீயகுணம் இரண்டுமுண்டு. தீயகுணத்திற்கு முறிவுபதார்த்தமுமுண்டு. அதைக்கூடச் சேர்த்து உபயோகிக்கும் படியாய் நமது முன்னோர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். புகையிலையி லுள்ள கெடுதிக்கோ முறிப்பு வைத்திய நூற்களில்கிடையாது. அதற் குத்தக்க முறிப்பு கண்டுபிடிக்கப்படவில்லை.

ஐரோப்பாகண்டம் மிக்க குளிர்தேசமாதலாலும், அங்குள்ளோர் பெரும்பாலும் மாமிசத்தையே ஆகாரமாய்க் கொள்வதாலும், அங் குள்ளவர்கள் விசேஷமாய்ச் சுருட்டுபிடிக்கும் வழக்க முடையவர்களா யிருக்கிறார்கள். அது அவர்களுக்கு அதிக தீங்கை யுண்டாக்காது. நமது நாடு உஷ்ண பூமியாதலால் இங்கு அது அனாவசியமே யாகும்.

இக்காலத்தில் பாடசாலைகளில் வாசிக்கும் சிறுவர்களில் அனே கர் பீடி, ஸிகரெட் முதலியவைகளைப் பிடிக்கிறார்கள். முதியோரில் பலர் சுருட்டுபிடிப்பதாயின் மறைவிடம் சென்று பிடிக்கிறார்கள். இச்சிறுவர்களோ பகலில் இராஜ பாட்டைகளில் ஜனக்கூட்டமான விடங்களில் செல்லும்போதும், டிராம் வண்டியிலும் பகிரங்கமாய்ப் பிடிக்கிறார்கள். வண்டியில் உட்கார்ந்தவுடனே பெரியோரிருக்கிறார்களே யென்ற இலச்சை அடியோடின்றி, புத்தகக் கட்டைப் பக்கத்தில்வைத் துவிட்டு ஜேபியிலுள்ள ஸிகரெட்டையும் தீக்குச்சியையும் எடுத்துக் கொண்டு, வாயில் சிகரெட்டை வைத்து பத்தவைத்துக்கொண்டு, கொள்ளிவாய்ப்பேயின் குஞ்சுகள் போல் புகைவிடுகிறார்கள். அப்புகை யை வாயில் மட்டுமல்ல நாசியாலும் விடுகிறார்கள். அந்தோ! அப்படி நடந்து கொள்வதால், நாம் சுயாதீனமுடையோம் நாகரீகமடைந்துள் ளோம் என்று தெரிவிப்பதாக இவர்கள் எண்ணிக்கொள்ளுகிறார் கள்போலும். இது மேல்நாட்டு நாகரீகத்தாலுண்டான கெடுதிகளில் ஒன்றேயன்றி வேறல்ல.

மேல் நாட்டாரிடமிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய நல்ல விஷயங்கள் எவ்வளவோ விருக்க அவற்றை விட்டுவிட்டு நமக்கு அனாவசியமும் ஆகாததுமான விஷயங்களை மட்டும் கிரகிப்பதில் நம்மவர் மிக்க புத்திசாலிகளாயிருக்கிறார்கள். ஒருவரிடத்தில் நல்ல குணத்தோடு தீயகுணமும் இருப்பது சுபாவமே. திருப்பாற்கடலைக் கடைந்தபோது அமுதத்தோடு விஷமும் தோன்றியது. கரும்பைத் தின்னும்போது சாற்றையுட்கொண்டு சக்கையை யுமிழ்ந்து விடுகிறோ மேயன்றி, சக்கையையுண்டு சாற்றை யுமிழ்பவர் யாராவதுண்டோ. அப்படிப்பட்டவர்களை முழுமூடரென்றல்லவோ கூறவேண்டும். அது

போலவே ஒருவரிடமுள்ள நற்குணத்தையே நாம் கைக்கொள்ள வேண்டுமேயன்றி துர்க்குணத்தையல்ல.

சுருட்டுபிடிப்பதால் உண்டாகும் தீமைகளைக்கூற இங்கு இடம் போதாது. அதிலும் சிறுவர்கள் சுருட்டுபிடிப்பதால் உண்டாகும் தீங்குகள் மிகக்கொடியவை. இதை நோக்கியே இலங்கையில் சிறுவர்களுக்கு சுருட்டு விற்கலாகாதென்றும் அவர்கள் பிடிக்கலாகாதென்றும் அத்துரைத்தனத்தார் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால் மிக்க தீங்குண்டாகுமென்று தெரிந்ததால்தான் துரைத்தனத்தாரே அதில் பிரவேசிக்க நேர்ந்தது. இங்கும் அவ்வாறு சட்டம் ஏற்படுத்த யோசனை நடந்து வருவதாய்க் கேள்விப்படுகிறோம்.

சிறுவர்கள் புகைபிடிப்பதால் உண்டாகும் தீங்கை ஒரேவாக்கியமாய்க் கூறிவிடுகிறோம். அது அவர்கள் தேகவன்மையைக்குறைத்து இருதயம் மூளைமுதலிய இராஜகருவிகளுக்கு பலயீனத்தை யுண்டாக்கி, இருமல்முதலிய கொடிய வியாதிகள்வந்து இம்சைப்படும்படி செய்யும்.

ஆகையால் பிற்காலத்தில் குடும்பத்தலைவர்களாகி தேசக்ஷேமத்திற்குப் பாடுபடவேண்டிய நீங்கள் முதலாவதாக தேகத்தை நல்ல நிலைமையில் வைத்திருக்கவேண்டும் என்பதைச் சிந்தையில் வைத்து இக்கொடிய வழக்கத்தை யடியோடு நீக்கிவிடுங்கள். உங்களில் அறிவாளிகள் ஒருசபையாய்க்கூடி மாணவர்களுக்குள் இத்தகைய துர்ப்பழக்கம் இருக்கவொட்டாது செய்யுங்கள். இதை யலட்சியமாய் நினைத்துவிடாமல் நீங்கள் கற்றதன்பயனைச் செய்கையால் காட்ட முயலுங்கள். உங்கள் நன்மை யொன்றைமட்டுங் கருதியே இதைப் பற்றி கூறியிருக்கிறோம் என்பதைச்சிந்தையில் வைப்பீர்களென்று நம்புகிறோம்.

---

## மனதில் நிறுத்தவேண்டிய சிலபுத்திமதிகள்

1. ஒருவேலையைச் செய்யும்போது முழுமனதையும் அதிலேயேநிறுத்தி அதுமுடிந்தபின்பே வேறொரு வேலையைத் தொடங்க வேண்டும்.

2. பெரியோரைக்கண்டவுடனே முன்பு வந்தனம் புரியவேண்டும். பிறகு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குமட்டும் அடக்கமாய் விடையளிக்கவேண்டுமேயன்றி அனுவசியமான எதையும்பற்றி பேசலாகாது.

3. ஒருவரிடம் சம்பாஷிக்கும்போது அவர்கள் முகத்தைப் பார்த்தே பேசவேண்டும்.

4. என்னேரமும் ஒருவரைக்கேலிசெய்வதும், அகசியம்செய்வதும், விகடம்பேசுவதும் அறிவாளிகளுக்கழகல்ல.

5. ஒன்றைப்படித்துவிட்டதனுலேயே பலனடைந்துவிட்டதாய் ஒருபோதும் நினைக்கலாகாது. அதனுல் ஒருபயனு முண்டாகாது.

படித்ததுபோல் நடக்க முயலவேண்டும். கற்பது கற்றபடி நடப்பதற்காகவே.

6. நூற்களில் வாசிப்பதைவிட ஆன்றோர் வாக்கியம் மிகச் சிறந்தது. ஆதலால் பெரியோர் கூறும் புத்திமதியை யலட்சியம் செய்யாமல் அதன்படி நடக்க முயலவேண்டும்.

---

## ஸ்திரீகள் பக்கம்

## மாமியும் மருகியும்

சகோதரிகளே! மாமிக்கும் மருமகளுக்கும் பரஸ்பர அன்பின்றி யென்னேரமும் சச்சரவாயிருப்பதினுல் அநேக குடும்பங்களில் சதா துயரமே குடிகொண்டிருப்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்களல்லவா. அத்தகைய குடும்பங்களில் புருடன் மனுநிலைமை யெவ்வாறிருக்கு மென்று நினைக்கிறீர்கள்? இருவர் சச்சரவிடும்போது எப்போதும் குற்றம் ஒருவர்மேல்மட்டுமேயிராது. ஒருவர்மேல் அதிகமிருந்தால் ஒருவர்மேல் கொஞ்சமாகவாவதிருக்கும். புருடன் மனைவி, தாய் இருவர்மேலும் அன்புபாராட்டக்கடமையுடையவன். ஆகையால் அத்தகைய சமயத்தில் அவன் யார்மேல் குற்றமென்று கூறுவான். மனைவிமேல் குற்றமென்று அவன் மனதிற்பட்டால் அதைத் தாராளமாய்க்கூறி அவளைக்கண்டிப்பது சுலபம். அப்படிக்கின்றி தாயார் மேற் குற்றமெனிலோ, குற்றமென்று மரியாதையாய்க் கூறினுலுங் கூட, "ஓகோ, இவன்பெண்சாதிபட்சமாகவே பேசுகிறுன். இவன் உபபலங்கொண்டே அவள் இப்படி நடக்கிறுள்" என்று இவன்றலை மேல் அபாண்டம் விழுகிறது. ஆகையால் அவன் இவர்களுக்காகப் பொருள்தேடிப் பகலெல்லாம் உழைத்துவிட்டு, வீட்டிற்குவந்ததே இவர்கள் உபசரணையாலும் அன்பாலும் சுகமும் மனுநிம்மதியும் அடைவதற்குப் பதிலாக, இவர்கள் சச்சரவைக்கேட்டு சொல்லொணு மனுவேதனை யடைகிறுன். அவன்மேல் இரக்கம்வைத்

தேனும் இப்புண்ணியவதிகள் சச்சரவு நீங்கிச் சும்மாயிருக்கிறார்களா? இல்லை. இருவர் போட்டியாலும் அவனுக்கு அன்னமே சமைக்காது சிவராத்திரியாக்கிவிடுகிறார்களே, இதுவே யவன்காணும் இலாபம். அதிலும் அவன் பூரணசாந்தமுடையவனா யிருந்துவிட்டாலோ பின்னுங்கேடே.

சிலர் மாமிமார்களே கொடுஞ்சூரிகளென்று கூறுகிறார்கள். அவ்வாறு ஒருசாரார்மேலேயே குற்றங்கூறுவது பிசகென்பதே உண்மை. இருவருமே அத்தீங்கிற்கு காரணம் எவ்வாறெனின்:—

மாமிமார்களிற் சிலர் மருமகள் வீட்டிற்குவந்ததே தாம் அதிகாரம்செய்து அவள் தன்னைக்கண்டால் நடுங்கவைத்து அடக்கியாளுவதே இனி தாங்கள் செய்யவேண்டிய தொழிலென்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். சிலர் நாளைக்கு மருமகள் வீட்டிற்குவருவதாயின் இன்றைக்கே அரிசி, மிளகாய், உப்பு, புளி முதலியவையிருக்கும் பெட்டிகளுக்குப் பூட்டுப்போட்டு வைத்துவிடுகிறார்கள். மருமகள் வந்தபின் பிரதிவேளைக்கும் மாமியார் எடுத்து அளந்துகொடுப்பவைகளைத் தான் அவள் சமைக்கவேண்டும். தன்மகள் செய்யின், தான் சற்றுமே கவனிக்காத அதே குற்றத்தை மருமகள் செய்துவிட்டால் அதைப்பிரமாதமாக்கி மகன் வந்ததே பிராதுகொடுக்கிறாள். அதிலும் ஸ்திரீகளையடிக்கும் சுபாவமுடைய புருடனாயிருந்தால், மருமகளுக்கு நிதமும் பூசை வாங்கிக்கொடுப்பதே மாமியார் வேலையாய்விடுகிறது. சிலபுருடரிடம் ஸ்திரீகளை யடிக்கும் துர்க்குணமிருக்கிறது. கல்விக்குறைவும் கோபத்தையடக்கா அறிவீனமுமே இதற்குக்காரணம். இன்னும் சில அறிவிலா மாமிமார் தம்மெதிரில் மருமகள் அவள் கணவனோடு பேசுவதற்கே பயப்படும்படிசெய்கிறார்கள். புருடனும் மனைவியும் இரவில் படுக்கையில்தான் குசுகுசுவென்று பேசிக்கொள்ளவேண்டும். இதிலும் மூடசிரோமணிகள் தாம் குறிக்கும் தினங்களில் மட்டுமே மருமகள் தன்கணவன் படுக்கையறையில் போய்ச் சயனிக்கவேண்டுமென்று கட்டளையிட்டுவைக்கிறார்கள். மருமகள் தன் தாய் தந்தையர் நிலைமைக்குத் தக்கவிதமாய் நகைகளையும் மற்ற சீதனப்பொருள்களையும் கொண்டுவருகிறாள். அப்போது இந்த மாமியாரே, மிக்க பெருந்தன்மையுடையவள்போல் அச்சமயம் அப்பெண்ணைக்கொடுத்தால் போதுமென்று, "ஆ! நகைகள் ஒரு ச... ங்குகளும்
தமா அம்மா. அதிலும் ஒருவர் கொடுப்பது எத்தனை நா... குழந்தைகளுக்கு
கும். என் தாய்வீட்டில் எனக்கு ஒன்றுமே போடவி...

மோராமாலை, வங்கி, தங்க ஒட்டியாணம் முதற்கொண்டுதான் போட்டுக்கழுட்டி விட்டேன். பெண்ணின் குணமே பிரதானம். நாங்கள் இதை யெல்லாம் சட்டை செய்கிறவர்களல்ல. ஏதோ அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறுபோடுகிறார்கள். புத்தியில்லாதவர்களானால் மருமகள் அதைக் கொண்டுவருவாளா இதைக் கொண்டுவருவாளா வென்று ஏக்கங்கொண்டிருப்பார்கள்...” என்று பெரிய பிரசங்கம் செய்தவள், மருமகள் தன் வீட்டிற்கு வந்தபின் சொல்பகுற்றம் செய்தவுடனே “அறுகூஞ்சி நாய்கள். இவள் ஆத்தாள் வீட்டு பவிஷு தெரியாதாக்கும். கழுத்தில் குண்டுமணி கூட இல்லாமல் வந்தவளுக்கு வாயைப்பார்” என்று மனம் போனபடி தூஷிக்கிறாள். சகோதரிகளே! மாமியார் இவ்வாறு நடந்து கொண்டால் மருமகள் மனதிற்கு எவ்வளவு வியாகூல முண்டாகுமென்பதையும், தன் மாமிமேல் அவளுக்கு அன்புண்டாகுமா வெறுப்புண்டாகுமா வென்பதையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். நமது பெண்ணை அவள் மாமியார் இவ்வாறு நடத்தினால் நமது மனம் சகிக்குமா வென்பதை மாமிமாராயிருக்கும் சகோதரிகள் சிந்தித்துப்பாருங்கள்.

நாம் பிற்பாகத்தில் கூறியிருக்கும் அத்தகைய கொடிய மாமிமார் இக்காலத்தில் அதிகமில்லை. ஏனெனில் இப்போது நாளுக்கு நாள் பெண்கல்வி விர்த்தியடைந்து வருவதோடு, புருடர்களிலும் கல்வியதிகமே யாவதால் தாயின் அத்தகைய கொடிய செயல்களுக்கு இப்போதிருக்கும் வாலிபர் உடன்பட மாட்டார்கள். அதற்கு மாறாய்ச்சிலர் தலைகீழ்பாடமாய் நடந்து கொள்ளுகிறார்கள்.

இனி மருமக்கமார் குற்றம் என்னவென்று கவனிப்போம். கலியாணமாகுமுன்பே தனக்குக் கலியாணம் முடிந்தால் தன் கணவன் தன்னை அன்பாய் நடத்துவா னென்றும், நம்மிருவருக்கும் பரஸ்பர அன்பும் மன ஒற்றுமையும் உண்டாய் விடுமென்றும் கன்னியர்களின் மனதில் ஒருவித நம்பிக்கையான அபிப்பிராயம் ஏற்பட்டுவிடுகிறது. ஏனெனில் வீட்டில் தன் தாயும் வேறு ஸ்திரீகளும் பேசிக்கொண்டிருக்கையில் அவர்களுள், “என் புருடர் எனக்குக் கொடுக்காமல் ஒரு அற்ப பண்டத்தையும் உண்ணமாட்டார். என் வார்த்தையைத்தள்ளமாட்டார். ஒவ்வொரு வேளையில் எங்களுக்குள் இவ்வாறு தாபம் நேரிடுவது கூட அவராலல்ல, அந்தக் கிழநாரி யிருக்கிறதே அடைவதற்குள் மாமியார் அவள் செய்கிற கலகமேயன்றி வேறில்லை.” லொரு மனோ தோள்வதை இக்கன்னியர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இதோடு வீட்டில் தங்கள் தாய்தந்தையர்களுக் குள்ளிருக்கும் பரஸ்பர அன்பையும் கண்ணுற் காண்கிறார்கள். ஆகையால் இவர்கள் முதல் முதல் புருடன் மனைக்கேகும்போதே புருடனிடத்து மனதில் தோன்றியிருக்கும் அன்போடு போகிறார்கள்.

மாமியார் விஷயத்திலோ எந்தப்புண்ணியவதியும் "என் மாமியார் மிக்க நல்லவள். என்னை அன்போடு நடத்துகிறாள்" என்பது முதலான வார்த்தைகளைக் கூறும்போது இக்கன்னியர் கேட்டதேயில்லை. இதோடு எந்த ஸ்திரீயும் தன் மருமகள் மேல் என்னேரமும் குற்றம் கூறுவதையே யிவர்கள் கேட்டிருக்கிறார்களன்றி, என் மருமகள் நல்லவள் என்று கூறியதை யிவர்கள் கேட்டதில்லை. ஆகையால் மாமிமார்கள் எல்லாரும் கெட்டவர்களென்றும், அவர்கள் தங்கள் மருமக்கமாரைக் தூஷிக்கிறவர்களேயன்றி புகழ்கிறவர்களல்ல வென்றும் இவர்கள் மனதில் அபிப்பிராயப் பட்டிருக்கிறது.

ஆகையால் புருடன் வீட்டிற்குப்போகும் போதே இவர்கள் உள்ளத்தில் மாமியார் என்ற விஷயத்தில் வெறுப்போடேயே செல்கிறார்கள். இதோடு பெரும்பாலும் இவர்கள்கொண்ட அபிப்பிராயப்படியே அனுபவமும் நடந்து விடுகிறது.

(தொடரும்)

---

## ஜீவோற்பத்தியும்—அவற்றின் சிகிச்சையும்

(479-ம் பக்கத்தொடர்ச்சி)

### (கரப்பான்களுக்கு ஔஷதம்)

இத்தகையவியாதிகளுக்கு அநேகமருந்துகள் பிரயோஜனப்படுகின்றன. என்னுடைய அனுபவத்திலும் சில மருந்துகள் உபயோகிக்கப்பட்டுவருவதால் அவற்றை இங்குகூறுவாம். அவையாவன: பச்சைதிராக்ஷி (அல்லது கொடிமுந்திரியிலையை) அறைத்து மேல்பூச நிவர்த்தியாகும். வசம்பு, மிளகாய் இவைகளைச் சாம்பலாக்கி தேங்காயெண்ணெயில் குழைத்து தடவநீங்கும். குதிரைச்சாணியை சாம்பலாக்கி தேங்காயெண்ணெயில் குழைத்துத் தடவவும். சாதாரண சிரங்குகளுக்கு மேல் பூச்சு மருந்துகள் பிரயோசனப்படுகின்றதில்லை. ஆனால் அத்தகையவர்களுக்கு விளக்கெண்ணெயும் பசும்பாலும் கலந்து ஒருபாலடைவிகிதம் காலையில் மாத்திரம் கொடுக்கவேண்டும். இப்படி 3-அல்லது 5-நாள் கொடுக்க சகல சொரி சிரங்குகளும் நிவர்த்தியாகும். அதிகநாள் நலியால் வருந்திய குழந்தைகளுக்கு

ஒருவிதவியாதியுண்டாவதுண்டு அஃதாவது (சிட்னி) என்ற நீர்ப்பை கெட்டு வயிறுவீங்கி கைகால்கள் சிறுத்து ஆகாரம் குறைந்து இரத்தம் வெளுத்து பார்க்க விகாரமாய் விளங்கும். இத்தகைய வியாதி (லிவர் என்னும்) ஜீரணப்பைகெட்டும் (ஸ்ப்ளீன் என்னும்) பித்தப்பை கெட்டும்வரலாம். இவற்றில் ஜீரணப்பை கெட்டுவிட்டால் உடனே இருதயமும் கெட்டுவிடும். இருதயத்துக்கும் ஜீரணப்பைக் கும் சம்பந்தமுண்டு. இரண்டில் எதுகெட்டாலும் வியாதிகுண மாவது கஷ்டமெனச்சொல்லலாம். பித்தப்பை நீர்ப்பை இவைகளின் கெடுதலால் உண்டாகும் வியாதிகள் குணமடைவது சாத்தியம். நீர்ப்பை கெடுவதாலுண்டாகும் வியாதிகளில் வயிறுப்பல் உண்டா கும். அதற்கு நீராம்பல் நீர்க்கோவை என்பார்கள் (வாடரி டிராப்சி) இவற்றிற்கு மேல்நாட்டார்கள்.

ஸ்பிரிர்ஈதர் நைட்ரஸ்
டிஞ்சர் டிஜிடலிஸ்
எக்ஸ்டிராக்ட் காக்டிகிராண்டிபோலிலிசியுடம்
ஆவிநீர்

இவைகளைக் கொடுத்து வருகின்றார்கள். நம்தேசத்திற்கும் அவர் களுக்கும் உள்ளவித்தியாசம் பலவிருந்தாலும், இத்தகையவியாதி களில் முக்கியமாய் மேல்நாட்டார்கள் பத்தியம் வைப்பதில்லை. நம் தேசத்தார் இத்தகைய வியாதிகளுக்கு உப்பு பூராவும் கூடாதென்று தீர்மானத்துக்கு வந்திருப்பதுமன்றி சாஸ்திரசம்மதமும் அனுபவ மும்பெற்று அநேக வியாதியஸ்தர்களை ஔடதமில்லாமலே பத்தியத் திலேயே குணப்படுத்தி யிருக்கின்றார்கள். சிற்சில மருந்துகளும் உண்டு. அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்குகூறுவோம். பிரமி யிலையைக்கொண்டுவந்து பசுங்கோமயத்தில்போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி காலை $\frac{1}{4}$–ஆழாக்கு கொடுத்து பாலன்னம் கொடுத்துவந்தால் சுகமாகும். இப்படி 3 நாள் கொடுக்கவேண்டும், வெள்ளைக்காட்டாமணக்கு இலையைக்கொண்டு வந்து பசுங்கோமயத் தில் இடித்து காலையில் $\frac{1}{4}$ ஆழாக்குவிதம் முன்சொன்ன பத்தியம் போல் 3 நாள் சாப்பிட வியாதிகுணமாகும். (தொடரும்.)

# சுந்தர்

## ஓர் அதிசயமான சிறு துப்பறியும் கதை

(கொலைக்குற்றம் ருசுவாகியும் குற்றவாளி விடுதலையே யடைந்தான்.)

டாக்டர் தாமோதரம் மாலை சுமார் 9-மணிக்குத் தன் அறையில் உட்கார்ந்து வாசித்துக்கொண் டிருக்கும்போது யாரோ தடதடவென்று தெருக் கதவைத் தட்டுவதைக் கேட்டு கோபங்கொண்டு,

"அடடா! இந்தப் பொடியன்கள் சும்மாவிருக்க மாட்டார்கள்போலிருக்கிறது. இந்த உபாத்தியாயர்கள் பிரம்பை யுபயோகிக்கிறதில்லை, மூடர்கள்" என்று கூறிக்கொண்டே தன் வேலைக்காரியாகிய கங்காபாய் என்பவள் பெயரைச் சொல்லி,

"கங்கா! போலீஸ் சேவகனை யழைத்துவா சொல்கிறேன்" என்றார்.

டாக்டர் தாமோதரம் கிழக்குக் கடற்கரை யோரத்திலிருக்கும் ஆனந்தபுரம் என்ற சிறு நகரிலிருப்பவர். வயது முதிர்ந்தவராதலால் சுலபத்தில் அவருக்குக் கோபம் வரும். அவ்வூரில் யாவரும் அவருக்குத் தெரியும். வயோதிக காலத்தில் அவர் சிறு மிருகங்கள் பட்சிகள் முதலியவற்றின் நடக்கைகளைப் பரிசோதனை செய்வதில் தன் காலத்தைக் கழித்து வந்தார். அவ்வூரிலுள்ள ஒவ்வொரு நாய், பூனை, கிளி முதலிய யாவும் அவருக்குத்தெரியும்.

டாக்டர் தாமோதரம் போலீஸ் சேவகனைக் கூப்பிடு என்று கூறி வாய் மூடு முன் கங்காபாய் ஓடிவந்து "ஐயா, யாரோ போலீஸார் வந்திருக்கிறார்கள். தங்களை யுடனே காணவேண்டுமாம்" என்றாள்.

டாக்டர் "போலீஸாரா! உள்ளே வரச்சொல்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே இரண்டு பேர் உள்ளே வந்து விட்டார்கள்.

வந்தவர்கள் வாய் திறப்பதற்குள், திறந்திருந்த சாளரத்தின் வழியே ஒரு குரங்கு குதித்தோடி வந்து டாக்டரின் தோள்மேலேறிக் கொண்டு பின்னால் குதித்துப் பதுங்கி எதிரே நிற்கும் இருவரையும் கண்டு கோபத்தோடு பல்லைக்காட்டி உறுமியது.

டாக்டர் குரங்கை நோக்கி, சுந்தர் எங்குவந்தாய் என்று கூறிவிட்டு எதிரில் நிற்கும் போலீஸாரில் ஒருவனை நோக்கி,

"விநாயகம்! நமது சுந்தர் இருக்கிறானே நம் நகரத்திலுள்ள புத்திமான்களி லொருவன் என்பதிற் சந்தேகமில்லை. இவனுக்கு மட்டும் வாயிருந்தால் அதிசயமான கதைகளை யெல்லாம் கேட்கலாகும்" என்றார்.

**விநாயகம்.**—"ஐயா, இக்குரங்கு எங்கள் பின் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். நமது ஊரில் ஒரு கோரசம்பவம் நேர்ந்திருக்கிறதையா,

பாபம் சண்முகம் பிள்ளையும் அவர் மனைவி வள்ளியம்மாளும் இருவரும் திடீரென்று ஏககாலத்தில் இறந்து விழுந்து கிடக்கிறார்கள். கொலை யென்று தோன்றுகிறது " என்றார்கள்.

**டாக்டர்.**—என்ன! சண்முகம் பிள்ளையும் அவன் மனைவியுமா!! நேற்று அவர்களைப்பார்த்து அவர்கள் கிளிப்பிள்ளைக்கு பேதிக்கு ஔடதம் கொடுத்து விட்டு வந்தேனே. அவர்கள் நல்ல திடதேகிகளாயிற்றே.

போலீஸாரில் மற்றொருவனான கோபாலு டாக்டரை நோக்கி,

" ஆம், அப்படி யிருந்தும் இருவரும் இப்போது சவமாய்க் கிடக்கிறார்கள் " என்றான்.

**டாக்டர்.**—" அடடா. நமது ஊரில் இப்படிப்பட்ட அக்கிரமமா ? இங்கே அத்தகைய குற்றம் செய்வோரும் யாருமில்லையே " என்றார்.

**கோபாலு.**—இதுதான் பெரிய அதிசயம். அவர்கள் யாவர்க்கும் நல்லவர்கள். அவர்களுக்கு விரோதிகள் யாருமில்லையே. தாங்கள் உடனே யெங்களோடு வருகிறீர்களா ?

**டாக்டர்.**—" இதோ ஒரு நொடியில் வருகிறேன் " என்று கூறிவிட்டுக் குரங்கை நோக்கி,

" சுந்தர் ! பாபம், உன் தாய் தந்தையர் இருவரும் மடிந்துபோனார்கள் நான் உன்னைக் காப்பாற்றுகிறேன் துயருறாதே " என்று கூறிவிட்டுப் போலீஸாரை நோக்கி,

" இது பேசாத குறையொன்றே. மற்றபடி மனிதரைப் போலவே யெல்லா அறிவுமுண்டு. இதற்கு மட்டும் பேசத்தெரிந்தால் இச்சம்பவம் இன்னேரம் இவ்வளவு மர்மத்திலிராது " என்றார்.

**கோபாலு.**—" நாங்கள் சவங்களருகில் செல்லும்போது இது எங்கள் மேல் உறுமி வந்தது. நாங்கள் அருகிற் சென்றால் கடிக்க வருகிறது " என்றான்.

**டாக்டர்.**—" பாபம், இது நீங்கள்தான் அதன் போஷகர்களைக் கொன்றீர்களென்று எண்ணி யிருக்கிறதாக்கும். மிருகங்களுக்கு என்ன அறிவிருந்தாலும் ஒவ்வொரு சமயத்தில் நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற வித்தியாசம் தெரியாது. ஆயினும் நடந்திருக்கும் துர்ச்சம்பவம் இன்னதென்று இதற்குத் தெரியும் " என்றார்.

அதன்பின் மூவரும் வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள்.

சண்முகம் பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் வயது 50-க்கு மேலிருக்கும். அவர்களுக்குச் சந்ததியில்லாததால் அவர்கள் நாய், பூனை, குரங்கு, கிளி, கீரி முதலிய ஜெந்துக்களை அன்போடு வளர்த்து வந்தார்கள்.

அவர்களிடமிருந்த ஜெந்துக்களில் சுந்தர் என்ற குரங்கும், இரங்கன் என்ற ஒருகிளியுமே முக்கியமானவை. இவைகளின் குணகுணங்களை டாக்டர்

தாமோதரம் அதிகமாய் ஆராய்ச்சி செய்திருக்கிறார். சண்முகம்பிள்ளையும் அவர் மனைவியும் மிக்க நல்லவர்களாதலால் அவர்களுக்கு விரோதி யாருமில்லை.

டாக்டரும் போலீஸாரும் இரண்டு மூன்று நிமிடங்களில் சண்முகம் பிள்ளையின் வீட்டை யடைந்தார்கள். விநாயகம் தன்கையிலிருந்த சாவியால் கதவைத்திறக்க மூவரும் உள்ளே நுழைந்தார்கள். இவர்களைக்கண்டதே கிளி இறக்கைகளைப் படபடவென்றடித்துக்கொண்டு சப்தித்தது. டாக்டர் அத னருகிற்சென்று "இரங்கா! உனக்குள்ளதுபோன்ற நாக்கு எல்லாஜெந்துக் களுக்கு மிருந்தால் சுலபமாய் நடக்கும் விஷயங்களையெல்லாம் தெரிந்து கொள்ளலாம்" என்றார். கிளி "சுந்தர், சுந்தர்" என்று கூவியது.

**டாக்டர்.**—"இக்குரங்கு அடிக்கடி இதன் இறகுகளைப் பிடித்திழுத்து இம் சிப்பது வழக்கம். அதனால் இரங்கனுக்கு சுந்தர்மேல் கோபம்" என்று கூறிவிட்டு வீடுமுழுதும் பார்த்தார்.

சண்முகம்பிள்ளையும் அவர்மனைவியும் இறந்துபோய் சற்றுநேரமாயிற்று. இருவரும் மஞ்சத்தில் படுத்தபடியிருக்கிறார்கள். இவர்கள் போஜனம் செய்து கொண்டிருந்த பாத்திரங்கள் அப்படி யப்படியேயிருக்கின்றன. ஒருகிண்ணத் தில் முக்கால்பாகம் சூப் இருந்தது. மற்றொன்றில் கொஞ்சம் சூப் இருந்தது. மற்ற பாத்திரங்களில் பதார்த்தவகைகள் இருந்தன.

**டாக்டர்.**—"பாஷாணமே, தடையில்லை. இந்த சூப்புகளையும் மற்ற பண்டங்களையும் சோதனைசெய்து பார்க்கவேண்டும்" என்றார்.

அச்சமயம் போலீஸார் எதையோ கண்டு கூச்சலிட்டார்கள். அதென்ன வெனில் சிறுசெடிகளைக் கொல்லும் பாஷாணம் நிறைந்த ஒருடப்பி அங் கொருமூலையில் திறந்தபடிகிடந்தது. அதிலுள்ளபாஷாணத்தில் கொஞ்சம் கீழே சிதறுண்டு கிடந்தது. போலீஸார் "டாக்டர்! இதோ இருக்கிறது பாஷாணம்." என்றார்கள்.

டாக்டர் "பாஷாணம் தெரிந்துவிட்டதனாலேயே உண்மை தெரிந்துவிட வில்லை. ஆயினும் இவர்கள் இப்பாஷாணத்தை யிப்படி அஜாக்ரதையாய் வைத்திருக்கக்கூடாது. இப்படிப்பட்டவற்றைக்கொண்டு எந்தத்துஷ்டனாவது ஒரு குடும்பமுழுதுமே யழித்துவிடலாம்" என்றார்.

**விநாயகம்.**—"எனக்கு இரண்டு அபிப்பிராயங்கள் தோன்றுகின்றன. அவற் றில் ஒன்றுதான் இவர்கள் மரணத்திற்கே காரணமென்று நினைக்கி றேன். ஒன்று, இன்று காலை ஒருநாடோடி இங்கேவீடுவீடாய்ப் பிச்சை யெடுத்துக்கொண்டிருந்தானும். மற்றொன்று தற்செயலாய்ப் பாஷா ணம் எப்படியோ உணவில் கலந்துவிட்டிருக்கும்" என்றான்.

**டாக்டர்.**—"இரண்டும் மூடத்தனமே. இப்போது ஒன்றும் சொல்லமுடி யாது" என்று கூறிவிட்டார்.

பாஷாணடப்பி பத்திரப்படுத்தப்பட்டது.

டாக்டர் உடனே அதிகாரிகளுக்குச் சங்கதி யறிவித்துவிட்டார். கோர னர் விசாரணைக்கு நாள் வைக்கப்பட்டது.

இக்கொலையைக் கேட்டதே ஊர்முழுதும் பெருங்குழப்பம் உண்டாய் விட்டது. சண்முகம்பிள்ளையின் வீட்டிற்கெதிரில் ஒருமூதாட்டி தன்வேலைக் காரியோடு வசித்துக்கொண்டிருந்தாள். அவள் பெயரே வாயாடி வீரம்மாள்

என்றால், அவன் சண்டையிடுவதில் கைதேர்ந்தவளென்று நாம் கூறவேண்டுவ தில்லை. சண்முகம்பிள்ளை வீட்டிலிருக்கும் கிளிமுதலியஜெந்துக்கள் என்னேரமும் கூச்சலிடுகின்றனவென்று அவள் அடிக்கடி வீதியில்வந்து சபிப்பதுண்டு. ஊரிலுள்ளவர்களில் பெரும்பாலாரை ஒருசமயமில்லாவிட்டால் ஒரு சமயத்தில் அவள் திட்டியே யிருப்பாள். ஆகையால் யாவரும் அவளுக்கு விரோதிகளே. அவளுடைய சொந்தவேலைக்காரியும் அவளை முகத்திற்குப் பின் தூஷிப்பாள்.

இக்காரணங்களால் ஊராரனைவரும் இவளே எதிர்வீட்டுக்காரரைக் கொன்றுவிட்டாள் என்று பிடிவாதமாய்க் கூறத்தொடங்கினார்கள். அதன்மேல் போலீஸார் விசாரிக்க ஆரம்பித்தார்கள். முதலாவது நாடோடியைப் பற்றி விசாரித்தார்கள். அந்த நாடோடி அன்று ஊரில் யாசகம் செய்தது உண்மையேயெனினும் சண்முகம்பிள்ளையின் வீட்டருகில்கூட அவன் செல்லவேயில்லையென்று சந்தேகமற விளங்கிவிட்டது.

அதன்மேல் வீரம்மாளைக் காணச்சென்றபோது அவள் மரணசம்பவம் நேர்ந்ததினம் காலைமுதல் நெடுநேரம்வீட்டில் இல்லையென்றும், அன்றுமாலை இரயிலேறி தேவனூருக்கு ஒரு சுற்றத்தார் வீட்டிற்குச்சென்றாளென்றும் அவள் வேலைக்காரியால் தெரியவந்தது. ஆகையால் அவள்மேல் சந்தேக மதிகரித்து தேவனூர்போலீஸாருக்குத் தெரிவித்து அவளைப் பிடித்து வரும்படி செய்தார்கள்.

மூன்றாம்நாள் கோரனர் மரணவிசாரணைசெய்ய ஆரம்பித்தார். முதலாவது சண்முகம்பிள்ளையும் அவர்மனைவியும் சாப்பிட்டுக்கொண்டிருந்த சூப்பில் பாஷாணம் கலந்திருக்கிறதென்றும், அவர்கள்வீட்டில் டப்பியிலிருந்த பாஷாணமே அப்பாஷாணமென்னும், அதில் ஏராளமாய் வெள்ளைப்பாஷாணம் இருக்கிறதென்றும் இரசாயன சோதனையால் ருசுவாயிற்று.

வீரம்மாள் விசாரிக்கப்பட்டபோது அவள், "ஐயோ, தெய்வமே! நான் ஒன்றுமறியேனே. அட படுபாவிகளே! என் தலைமேல் அபாண்டம் போட்டால் நீங்களும் உங்கள் பிள்ளைக்குட்டிகளும் விளங்கவேமாட்டீர்கள். நீங்கள் * * *" என்று கோரனரை, டாக்டரை, செத்தவர்களை யாவரையும் சபிக்க ஆரம்பித்தாள்.

கோரனர் ஜூரிகளைநோக்கி,

"இப்போது அவர்களிருவரும் பாஷாணத்தால் மடிந்தார்கள் என்று மட்டும் தெரிகிறது. ஆனால் பாஷாணத்தை யவர்களே ஆகாரத்தில் கலந்துகொண்டு தற்கொலை புரிந்துகொண்டார்களென்று நினைக்கக் காரணமில்லை. வேறொருவரே போட்டிருக்கவேண்டும். அன்று அவ்வீட்டிற்குள் அன்னியரொருவரும் சென்றதாய்த்தெரியவில்லை. யாரமேலும் சந்தேகம்கொள்ளவும் காரணமில்லை......" என்று கூறிக்கொண்டே யிருக்கையில் ஒருவன் துரிதமாய் ஓடிவந்து கோரனரிடம் ஒரு கடிதத்தை யளித்தான்.

கோரனர் அதை வாசித்துப்பார்த்துவிட்டு ஜூரர்களைநோக்கி "இக்கடிதம் டாக்டர் தமோதரம்பிள்ளை யெழுதியது. விசாரணையை முடிவுசெய்யாமல் இன்னும் ஒருமணிநேரம் தாமதித்தால், தான் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்துவருவதாய்க் கூறுகிறார்" என்றார். அதேப்படி யாவரும் ஆவலோடு டாக்டர்வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சுமார் முக்கால்மணிநேரங்கழித்து டாக்டர் தாமோதரம், கையில் கிளியின்கூண்டை யெடுத்துக்கொண்டு, தோள்மேல் குரங்கை உட்காரவைத்துக்கொண்டு,சபைக்

குள்வந்தார். விநாயகம் என்ற போலீஸ்காரன் கையில் பாஷாணடப்பியையும் ஒரு தேயிலைக்கரண்டியையும் எடுத்துக்கொண்டு அவர்பின்னால் தொடர்ந்து வந்தான். இவர்களைக்கண்டதே யாவரும் கலகலவென்று நகைத்தார்கள். கோரனர் டாக்டரைநோககிப் பேச வாய்திறந்ததே எங்கும் நிர்ச்சந்தடியாய் விட்டது.

டாக்டர் தாமோதரம் கிளிக்கூண்டை மேஜைமேல் வைத்துவிட்டு குரங்கைக் கையில்பிடித்துக்கொண்டு நின்றார். கோரனர் அவரைநோக்கி "ஒன்றும் அகப்படப்போகிறதில்லை யென்று எனக்கு அப்போதே தெரியும்" என்றார்.

டாக்டர்.—"அதற்கு மாறாகக் குற்றம்நடந்த விதத்தைச் சரியாய் அறிந்து கொண்டதோடு, குற்றவாளியையும் கண்ணால்கண்டசாட்சியையும், நான் கண்டறிந்த வழியைப்பார்த்த ஒருசாட்சியையும் கூடவே கொண்டுவந்திருக்கிறேன்" என்றார்.

இதைக்கேட்டதே கோரனர்முதல் யாவரும் ஒன்றும் தோன்றாமல் திகைத்தார்கள். சிலர் டாக்டருக்குப் புத்தி சபலித்து விட்டதென்று, ஐயோ பாபம் மிக்க நல்லவர் என்றார்கள். சிலர் விநாயகனைச் சந்தேகத்தோடு நோக்கினார்கள்.

கோரனர்.—"அப்படியானால் யார் பாஷாணத்தை யவர்கள் ஆகாரத்தில் கலந்தது ?" என்றார்.

டாக்டர் சட்டென்று விநாயகனிடமிருந்த டப்பியைவாங்கிக் கிளியின் முன் நீட்டியதே, கிளி, "சுந்தர், சுந்தர்" என்று கத்தியது. இதைக்கேட்டதே யாவரும் சொல்லொணா வியப்படைந்தார்கள். டாக்டர் கோரனரை நோக்கி,

"ஆம், சுந்தர் என்ற இந்த வானரமே பாஷாணத்தை யவர்களுடைய சூப் கிண்ணங்களில் கலந்தது. இக்கிளி அதைப் பார்த்துக்கொண்டிருந்தது. இனி நான் இதைக் கண்டுபிடித்த விதத்தைக்கூறுகிறேன்கேளும்" என்று பின்வருமாறு இயம்பினார்:—

"பாஷாணம் கீழே சிந்தியிருந்ததைக் கண்டபோதே இது சிறுபிள்ளைகள் அல்லது அவர்கள் போன்றவர்கள் செய்கையா யிருக்கவேண்டுமென்று என் மனதிற்பட்டது. அதுமட்டுமல்ல, நான் பாஷாணடப்பியை யெடுத்தபோது, கிளி, "சுந்தர், சுந்தர்" என்று கூவிற்று. அதோடு குரங்கு ஏறக்குறைய மனிதன் செய்கைகளைச் செய்யக்கூடியது. ஆகையால் குரங்கின் வேலையோ வென்று எனக்கு அய்யமுண்டாயிற்று. பிறகு அப்பாஷாணடப்பியை நான் பூதக்கண்ணாடியால் சோதித்தபோது, அதன்மேல் குரங்கின் விரல்கள் பதிந்திருந்த குறிகள் தோன்றின. அதனால் என்சந்தேகம் பலப்பட்டது, ஏன், உண்மையென்றே தோன்றிற்று. ஆயினும் இன்னும் அறிய வேண்டும் என்று தீர்மானித்தேன். நான் கற்றிருக்கும் மிருககுணங்களைப் பற்றிய ஆராய்ச்சியால் குரங்குபோன்ற மிருகங்களிடம் ஒரு குணமிருப்பதை நானறிவேன். அதாவது அவைகள் ஒரு காரியத்தைச்செய்தால், மறுபடி அதைப்போன்ற சந்தர்ப்பங்களே வாய்க்கும்பட்சத்தில், அவை மறுபடி முன் செய்ததுபோலவே செய்யும். ஆகையால் அம்முகாந்திரமாய்ச் சோதிக்க வேண்டுமென்று தீர்மானித்து, விநாயகம் என்ற இந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனை யழைத்துக்கொண்டு அவ்வீட்டிற்குச்சென்று, அன்று இருந்தது போல் அதேவிடத்தில் கிண்ணங்களில் சூடாயிருக்கும் சூப் முதலியவற்றைச் செய்துவைத்து, பாஷாணடப்பியையும் முன்போல் திறந்துவைத்துவிட்டு

குரங்கைச் சாடையாய் அங்கு விட்டுவிட்டு, நாங்கள் இருவரும் மறைவான ஒருவிடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தோம். குரங்கு அங்கு வைத்திருந்தவற்றை யுற்றுநோக்கியதும் அருகிலிருந்த ஒருமாடத்திலிருந்து இக் கரண்டியை யெடுத்துவந்து பாஷாணத்தை யள்ளி இரண்டு கூப் கிண்ணங்களிலும் ஒவ்வொரு கரண்டிபோட்டுத் துழவிவிட்டுப் பிறகு கரண்டியை முன்போல் வைத்துவிட்டது. இறந்தவர்கள் காபி முதலியவற்றிற் சர்க்கரை முதலியவற்றை யள்ளியிடுவதைக்கண்டிருந்த பழக்கத்தால் குரங்கு அப்படியே செய்யநேர்ந்தது."

இவ்வாறு குற்றம் ருஜுவாகியம் குற்றவாளி விடுதலையே யடைந்ததோடு அதுமுதல் டாக்டருடைய அபிமான புத்திரனுய்விட்டான்.

---

## ஜனன இரகசியமும் நாம்செய்யும் கன்மக்கிரியைகளால் பிதுர்க்களுக்குப் பயனுண்டாவென்பதும்.

மனிதன் எடுக்கும் ஜனனங்களுக்கு அளவில்லையென்பதே சாத்திரசம்மந்தமும் ஆன்றோர் துணிபுமாகும். அதைத் தக்க ஆதாரங்களோடு இங்கு நிரூபிக்கவேண்டியது அவசியமன்றும். ஏனெனின் ஆன்றோர் அநேகநூற்களில் அதைப்பற்றி விரிவாய்க்கூறி சுருதி யுக்தி அநுபவத்திற்கு ஒப்ப சித்தாந்தப்படுத்தியிருக்கிறார்கள். ஆன்மா அழியாத நித்தியப்பொருள். இன்னகாலத்தில் உற்பத்தியானதென்ற காலவரையின்றி அநாதியாயுள்ள பொருளே நித்தியமாயிருக்கக்கூடும். இடையில் தோன்றியது நித்தியமும் அழியாததுமாகாது. இதனால் ஆன்மா நெடுங்காலமாய்ப் பலவித ஜனனங்களில் உழன்று கொண்டே வருகிறதென்றும் அது முன்ஜன்மத்தில் செய்தவினையால் இச்சன்மமெடுத்திருக்கிறதென்றும், இதில்செய்யும் வினையால் மறு ஜனனமெடுக்கிறதென்றும், இவ்வாறு அந்தந்த ஜன்மத்திற்கு அதற்கு முன்ஜன்மத்தில் செய்தவினையே காரணமென்றும் தெரிகிறது.

> சென்மாந்தரஞ்செய்த வினைகளுடல் தருமெனிற்
> செல்கால மிவனுண் டலோ
> கன்மாநு பவநரக சொர்க்கமெனில் வருகின்ற
> காலத்து மிவனுண் டலோ
> உன்மாத யாதனு வுடல்கடவு ளுடல்மறுட
> வுடல்மாறி மாறி யழியும்
> தன்மாய வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு
> சத்தென்ப தொக்கு மகனே."

என்று கைவல்யநூலிற் கூறியிருப்பதன்கருத்து இதுவேயாகும்.

இதுவிஷயத்தில் சிலர் ஒரு பிரமாதமானகேள்வியைக் கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல. அக்கேள்விக்குத் தக்கசமாதானம் கிடைக்கவில்லை யென்ற பெருஞ்சந்தேகத்தையே காரணமாய்க்கொண்டு ஞானத்தை யடையமுயலாது பிறவியை வீணுக்கிக்கொள்ளுகிறார்கள். அவரவர் வினைக்கீடாய் இச்சந்தேகம் பெரிய விபரீதமாகவும் விர்த்தியாகிவிடுகிறது. அக்கேள்வி எதுவெனின்,

"ஆன்மா இந்த ஜனனமெடுத்ததற்குக் காரணம் இது முன் ஜனனத்தில்செய்தவினை யென்பதொக்கும். இவ்வாறே அந்தந்த ஜனனத்திற்கும் அததன் முன்ஜனனத்திற்செய்த வினையே காரண மென்பதும் பொருந்தும். ஆயினும் ஆன்மாவிற்குத் தேகமின்றேல் வினையைச் செய்யமுடியாது. ஆகையால் அது முதல்முதல் கன்மம் செய்வதற்கு ஒருதேகம் இருந்தே தீரவேண்டும். அது வினையொன் றும் செய்யாதிருக்கையில் அதற்கு அந்த முதல்தேகம் வரவேண் டிய காரணமென்னை?" என்பதே.

இக்கேள்வியும், கன்மம்முன்பா ஜென்மம்முன்பா யென்ற கேள் வியும், சுத்தமாயிருந்த ஆன்மாவிற்கு ஆதியில் அஞ்ஞானம் எப்படி வந்தது என்ற கேள்வியும், பரிசுத்தமான பரப்பிரம்மத்தினிடத்தில் கயிற்றில் அரவு தோன்றல்போலவும் கிளிஞ்சலில் வெள்ளிதோன்றல் போலவும் உள்ள ஆவரணம் என்ற சக்தியெப்படிதோன்றியது என்ற கேள்வியும் யாவும் ஒரேகேள்வியே யாகும்.

இதேகேள்வியை, அதாவது கன்மம்முன்பா ஜென்மம்முன்பா என்ற கேள்வியை அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவைக் கேட்ட போது, அவர் "வித்தும் மரமும்போல்" என்றருளினரென்று கூறப் பட்டிருக்கிறது. இதன் கருத்தாவது:—வித்திலிருந்தே மரமுண்டா கிறது. ஆயினும் அந்தவித்து ஒருமரத்திலிருந்தே யுண்டாயிருக்க வேண்டும். ஆதலால் வித்து மரத்திற்குக் காரணமாயும் மரம் வித் திற்குக் காரணமாயுமிருக்கிறது. இவ்வாற்றால் மரமே முன்னென் றுவது அல்லது வித்தே முன்னென்றுவது கூறமுடியாது. ஆனால் இதில் ஒருவிஷயம் தெளிவாய் ஏற்படுகிறது. அதாவது மரம் வித் திற்கு காரணமெனின், இப்போதிருக்கும் மரம் அதிலுண்டாகும் வித்துக்குக் காரணமென்றும், மரத்திற்கு வித்துகாரணமெனின், இந்த மரத்திற்கு இதை யுண்டாக்கிய (முன்னிருந்த) வித்துகாரண மென்றும், இப்போ திம்மரத்திலுண்டாகிய வித்து இனிவரப் போகும் மரத்திற்கு காரணமென்றும் மட்டுமே தெரிகிறது.

அதாவது தாட்டாந்தத்தில் இந்த ஜென்மத்திற்குக் காரணம் முன்ஜென்மத்தில் செய்தவினையேயென்றும், இச்சென்மத்தில் செய் யும் வினை மறுஜென்மத்திற்குச் காரணமாகுமென்றும் தெரிகிறதே யன்றி, ஆன்மா கன்மம் செய்யாமலிருக்கும்போது அதற்கு முதல் முதல் வந்த ஜென்மத்திற்கு என்னகாரணம் என்ற கேள்வி விடை யின்றியே யிருக்கிறது.

இதன் விடையைத்தெரிந்து திருப்தியடையாமல் இந்தப்பெரிய சந்தேகத்தை வைத்துக்கொண்டே நமது முன்னோராகிய மகான் களும், இப்போதும் ஆன்மஞானத்தை யடையும் மகான்களும் ஞானப்பியாசத்தைத் தொடங்கி ஞானத்தைப்பெற்று முமூக்ஷுக் களா யிருப்பார்களா? ஒருக்காலுமில்லை. ஏனெனில் அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம் இம்மூன்றும் ஞானத்திற்குப் பெரியதடைக

ளாதலால் அவற்றை யடியோ டொழித்தாலன்றி ஞானம் ஒருபோதுங்கிட்டாது. அப்படியாயின் அவர்களெல்லாம் எவ்வாறு இச்சந்தேகத்தை நிவர்த்திசெய்துகொண்டார்கள் என்பதையே நாம் அறியவேண்டும். ——— (தொடரும்)

## பொது சமாசாரங்கள்

### பிரம்மஸ்ரீ V. கிருஷ்ணசாமிஜடாவல்லபர் B.A. அவர்களுக்கு இராய்பஹதூர் பட்டம் அளிக்கப்பட்டது.

இவர் பூர்வீகமுதல் வேதங்களில் நல்ல பாண்டித்யமுடைய கௌரவம் பொருந்திய குடும்பத்திற் றோன்றியவர். இவருடைய பிதாமகர்க்கு வேதத்திலிருந்த பாண்டியத்திற்காக தஞ்சாவூர்மகாராஜா அவர்களால் "ஜடாவல்லபர்" என்ற கௌரவப்பட்டம் அளிக்கப்பட்டது. ஆயினும் இவர் அதற்கும் உயர்வான "கனபாடி" என்ற அரியபட்டத்திற்குரியவர் என்று விளங்குகிறது. எவ்வாறெனின் தஞ்சாவூர்மகாராஜாவே அவருக்கு மேற்படி "கனபாடி" என்ற பட்டத்தை யளிக்க முயன்றபோது அப்பெருந்தகையார் தமது குரு ஜடாவல்லபர் ஆதலால், தாம் அதிலும் உயர்வான பட்டத்தை வகிப்பது யுக்தமன்றென்று மரியாதையோடு மறுத்துக் கூறிவிட்டார். இதனால் அப்பெரியாரது குருபக்தியும் பெருந்தன்மையும் எத்தன்மையவென விளங்குகின்றன?

நமது ஜடாவல்லபர் அவர்கள் வித்தியார்த்திவிஷயத்தில் பிரசித்திபெற்றிருந்த பிரம்மஸ்ரீ சுவாமிநாத ஜடாவல்லபர் அவர்களுடைய சகோதரர். இவருடைய தம்பி இப்போது சைதாபேட்டை தாசில்தாராகவும், இவர் மூத்தபுத்திரர் சென்னைநகரில் Ag. போலீஸ் இன்ஸ்பெக்டராகவு மிருந்துவருகிறார்கள்.

இவர் முதல் முதல் வித்தியா இலாக்கா டைரெக்டர் ஆபீஸில் 15-ரூபாய் சம்பளத்திற்கு உத்தியோகத்திலமர்ந்து தமது உழைப்பினாலும் நுண்ணறிவோடுங்கூடிய வேலைத்திறத்தினாலும் யோக்கியதைபொருந்திய நீதிநெறிகளாலும் இப்போது மேற்படி டைரக்டர் அவர்களுடைய பெர்ஸனல் அஸிஸ்டென்ட் என்னும் உயர்பதவியடைந்திருக்கிறார். ஒருதேசத்தின் க்ஷேமாபிவிர்த்திக்கு இன்றியமையாததான வித்தியா இலாகாவிற்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இவர் முதிர்ந்த அனுபவமுடையவர். வாலிபப்பருவத்திலேயே வித்தியா இலாகாகாரியதரிசியாயிருந்த ஸர்ஹென்றி ஸ்டோக்ஸ் என்பவரால் புத்திநுட்பத்திற்கும் தொழிற்றிறமைக்கும் நன்குமதிக்கப்பட்டதோடு மிஸ்டர் ஸ்க்ரிக், டன்கன், ஸர் ஆல்பர்ட்போர்ன், ஸ்டோன் முதலிய டைரக்டர்களாலும், நன்கு மதிக்கப்பட்டவர். ஜாதி மதம் முதலிய வித்தியாசங்களைக் கருதாமல் பாரபட்சமின்றி நடந்துகொள்ளு மியல்பும் யாவர்க்கும் நன்மைபுரியும் குணமுமுடையவர்.

இத்தகைய உத்தமபுருடருக்கு நமது அரசச்சக்ரவர்த்தி இராய்பகதூர் என்ற பட்டத்தை யளித்ததைப்பற்றி நம்நாட்டின ரனைவரும் மிக்க உவகையடைகிறோம் என்பது கூறாமலே விளங்கும். இது சம்பந்தமாய் சைதாபேட்டையிலுள்ள சங்கத்தார் (Saidapet Club) நிகழும் ஜூலைமீ 9உ மாலை ஒரு சபைகூடி ஜடாவல்லபரவர்கட்கு துரைத்தனத்தார் இராய்பகதூர் பட்டத்தை யளித்ததற்காக தாங்கள்கொண்ட மகிழ்ச்சியை வெளியிட்டதாகத் தெரியவருகிறது. இவர் வித்தியா இலாகாவின் விஷயங்கள் முழுமையும் அங்கை நெல்லிபோல் உணர்ந்திருப்பதோடு, அதைச்சேர்ந்த முக்கிய பத்திரங்களனைத்தும் இன்று மறைந்துவிடின் நாளைக்கே அவற்றைத் தம் மனதி

லிருந்து சிருட்டித்துவிடக்கூடிய மனோசக்திவாய்ந்தவர். ஆகையால் துரைத்தனத்தார் இவரைக் கௌரவப்படுத்த அளித்தபட்டத்தை யிதோடு நிறுத்த மாட்டார்களென்றே நம்புகிறோம்.

இவர் இன்னும் நெடுங்காலம் பூரணசுகத்தோடும் தேகதிடத்தோடும் சந்தோஷமனதோடும் இருந்து இன்னும் மேலான கௌரவங்களை யடைய வேண்டுமென்று சச்சிதானந்தப் பரம்பொருளாகிய கருணாநிதியை மனதாரத் துதிப்போமாக.

குறிப்பு:—கடந்த சஞ்சிகையில் இதை வெளியிடக் காலதாமதம் நேர்ந்ததாலும் விஷயங்களைப் பூரணமாய் வெளியிடவேண்டுமென்ற விருப்பத்தாலும் இச்சஞ்சிகையில் பிரசுரிக்கலாயிற்று.

---

**நட்சத்திரங்கள்:**—வானத்தின் 200-கோடி நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருப்பதாய் இதுவரையில் தெரியவந்திருக்கிறது. மொத்தம் 300-கோடிக் கதிகமிராதென்று நம்பப்படுகிறது.

நக்ஷத்திரங்களிடமிருந்து பூமிக்குவரும் மொத்தப்பிரகாசம் 47-கஜ தூரத்திலிருந்துவரும் 16-மெழுகுவத்திகளின் பிரகாசத்திற்குச் சமமென்று கணக்கிடப்படுகிறது.

**சந்திரர்கள்:**—நமது பூமிக்கு ஒரேயொரு சந்திரன் இருக்கிறது.

(Mars) அங்காரகனுக்கு 2-சந்திரர்கள்
(Uranus)க்கு 4-சந்திரர்கள்
(Jupiter) பிரகஸ்பதிக்கு 9-சந்திரர்கள்
(Saturn) சனிக்கு 10-சந்திரர்கள்
(Neptune) வருணனுக்கு 1-தான் இருப்பதாய் இதுவரையில் தெரிந்திருக்கிறது.

இவ்வாறானால் (Saturn) சனி உலகத்தில் பத்துபூரணசந்திரர்களும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் இரவு எவ்வளவு அற்புதமாயிருக்குமோ வென்பது மனதிற்கெட்டவில்லை.

1915ஞு இரண்டு புது வால்நக்ஷத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வேறு இரண்டு வால் நக்ஷத்திரங்கள் அவைகள் உதயமாகுமென்று எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குச் சரியாய் உதயமாயின.

**யுத்தம்:**—மேற்கரங்கத்தில் இப்போதுதான் நேசக்கட்சியார் எதிரிகளை வலுவில் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதுகாறும் அவர்களை முன்னுக்குவரவொட்டாது தடுத்துக்கொண்டும் விசேஷசேதமுண்டாக்கி பலத்தைக் குறைத்துக்கொண்டும்மட்டுமே யிருந்தார்கள். கடந்த ஒரு வாரம் நடந்த கடுஞ்சண்டையில் நேசக்கட்சியார் ஜர்மானியரை யுத்த முனைமுழுதும் தாக்கி மிக்க பலமான அவர்களுடைய முதல்வரிசைப் பாதுகாப்பு ஸ்தலங்களிலிருந்து அவர்களைப் பின்தள்ளிவிட்டார்கள். நேசக்கட்சியார் பிடித்தவிடத்தை மறுபடி இழக்காவண்ணம் பலப்படுத்திக்கொண்டு உறுதியோடு முன்சென்றுகொண் டிருக்கிறார்கள். இங்கிலீஷ்காரர், பிரன்சுக்காரர், ஆஸ்ட்ரேலியர், இந்தியர், இரஷியர் இத்தனைஜாதிப்படைகளும் இப்போது மேற்கரங்கத்தில் யுத்தம்புரிகின்றன. இரஷியரும் கிழக்கரங்கத்தில் எங்கும் நம்பிக்கையோடு முன்சென்றுகொண்டிருக்கிறார்கள். இந்த யுத்தம் முடிவான பலனையடையும் முதற்படியென்றே நம்பலாகும்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

நள ௵ ஆடி ௴ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

பசலி 1325-26, கோல்லம் 1091-92,

இங்கிலீஷ் 1916-ம் ௵ ஜுலை—ஆகஸ்டு ௴

| ஜூலை | ஆடி | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | ஞா | பிர-6–28 | திரு-52-58 | அமி 53 ம | தனுசு பும்ஸவனம் |
| 17 | 2 | தி | துதி–1-53<br>திரி-54-59 | அவி-48-37 | சித்த 60 | கரிநாள் |
| 18 | 3 | செ | சது-50-33 | சத-45-33 | மரண 60 | மரணயோகம் |
| 19 | 4 | புத | பஞ்-46–39 | பூர-43–48 | அமி 44 சி | வித்தியாப்பியாசம் |
| 20 | 5 | வி | சஷ்–43-42 | உத்-42-42 | சித்த 60 | |
| 21 | 6 | வெ | சப்-41-54 | ரே-42-45 | அமி 60 | புதுப்பாத்திரம் புழங்க |
| 22 | 7 | ச | அஷ்-41-17 | அசு-43-57 | சித்த 60 | பூமுடித்தல் |
| 23 | 8 | ஞா | நவ–41–54 | பர-46-22 | சித்த 60 | பசுக்களை வாங்க |
| 24 | 9 | தி | தச-43–51 | *கார்-50-6 | மர 50 அ | கிருத்திகைவிரதம் |
| 25 | 10 | செ | ஏகா-46-55 | ரோ-54-54 | அமி 55 சி | சமஸ்தாபரணம் தரிக்க |
| 26 | 11 | புத | துவா-50-50 | மிரு-60-0 | சித்த 60 | பொன்னுருக்க |
| 27 | 12 | வி | திர-55–36 | மிரு–')-35 | மரண 60 | சூளையில் நெருப்புவைக்க |
| 28 | 13 | வெ | சது-60-0 | திரு-6-51 | சித்த 60 | புதுமாடுவாங்க |
| 29 | 14 | ச | சது–0–33 | புன-13-17 | சித்த 60 | ஆடி அமாவாசைவிரதம் |
| 30 | 15 | ஞா | ● அமா5-19 | பூச–19–30 | சித்த 60 | புதுவுரல் உலக்கை புழங்க |
| 31 | 16 | தி | பிர–9-33 | ஆயி-25-8 | சித் 20ம | ஜெபம் பூர்த்திசெய்ய |
| 1 | 17 | செ | துதி-13-3 | மக-29-59 | சித்த 60 | புது எருதுகளைவாங்க |
| 2 | 18 | புத | திரி-14-42 | பூர-32-50 | அமிர் 60 | ஆயுதபிரயோகம்செய்ய |
| 3 | 19 | வி | சது-16-39 | உத்–36–14 | மர 36 சி | கிரகப்பிரவேசம் |
| ஆகஸ்டு 4 | 20 | வெ | பஞ்–16-24 | அஸ்-37-28 | அமி 37 சி | கரிநாள் |
| 5 | 21 | ச | சஷ் -15-5 | சித்-37-35 | மர 38 அ | |
| 6 | 22 | ஞா | சப்-12–38 | சுவா–36–28 | சித் 37 ம | கிருஷிசெய்ய |
| 7 | 23 | தி | அஷ்-9-8 | விசா-34-28 | மர 34 சித் | |
| 8 | 24 | செ | நவ-4-49<br>தச-54-57 | அநு-31–41 | சித்த 60 | |
| 9 | 25 | புத | ஏகா–54-7 | கேட்-28-18 | சித் 28 மர | புதுவுரல் உலக்கைபுழங்க |
| 10 | 26 | வி | து-48-9 | மூல-24-31 | சித்த 60 | வித்தியாப்பியாசம் |
| 11 | 27 | வெ | திர-42-3 | பூரா-21-27 | சித்த 60 | வரலக்ஷ்மீ விரதம் |
| 12 | 28 | ச | சது–35–54 | உத்–16-16 | சித்த 60 | பூமுடித்தல் |
| 13 | 29 | ஞா | ○ பௌள30-12 | திரு–12–36 | அமி 12 ம | ரிக்யஜுர்வேத உபகர்மம் |
| 14 | 30 | தி | பிர-24–53 | அவி–8–50 | சித்த 60 | காயத்ரிஜபம் |
| 15 | 31 | செ | துதி-20-45 | சத–5–51 | மரண 60 | திதித்வயம் |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS